
00019

# கூட்டுறவுத் தீபம்



வெளியீடு:

## புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூட்டுறவுச் சங்கம்

60.0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்களுக்கோர் மண்டபம்

அதற்கென

ஒளிபரப்புகின்றதொரு

'கூட்டுறவுத் தீபம்'

இவை பார்த்து

இன்பமடைகின்றோம், நாம்.

**புங்குடுதீவு ~ நயினாதீவு ப.நோ.கூ. சங்கத்தின்**
**பணி சிறக்க எம் வாழ்த்துக்கள்**

*ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்*
*ஊர்காவற்றுறை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T|800|10019



# கூட்டுறவுத் தீபம்

புங்குடுதீவு – நயினாதீவு பல நோக்குக்

கூட்டுறவுச் சங்க புனரமைக்கப்பட்ட

கிராமிய வங்கி மேல்மாடிக் கட்டிடத் திறப்பு விழா

## சிறப்பு மலர்

**30.09.2001**

வெளியீடு

புங்குடுதீவு - நயினாதீவு

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு - நயினாதீவு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# இயக்குநர் சபை 2001



தலைவர்
லயன் டாக்டர் க.இராஜரெட்ணம் J.P.



உபதலைவர்
லயன் எஸ்.கே.சண்முகலிங்கம்



நெறியாளர் குழு உறுப்பினர்
திரு.ஆ.பொன்னம்பலம் J.P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிமயமான எதிர்காலத்திற்காக வாழ்த்துக்கள்



புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிய கட்டிடத் திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கூட்டுறவுத் தீபம் - என்னும் இம் மலர் நடந்து போனவைகளை மீட்டுப் பார்ப்பதாகவும் அமைகின்றது.

பழையவற்றை மீட்டுப்பார்ப்பது எதிர்காலத்தை எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டுவதாக இருக்கலாம்.

குறிப்பாக யாழ்ப்பாண நகருடன் போக்குவரத்து தொடர்புகளைப் பேண முடியாத ஒரு காலம் புங்குடுதீவு, நயினாதீவு மக்களுக்கு இருந்தது என்பதை நினைக்கும் போது - இப்போதும் நெஞ்சம் கனக்கும்.

நடந்தவைகள் நடந்தவைகளாகவே இருக்க இனிமேல் நடப்பவைகள் நல்லவைகளாக இருக்க வேண்டும்.

அவ்வகையில், புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்கம் தனது மக்களுக்கான சேவையை வழங்குவதற்கு தற்போது அமைக்கப்பட்டிருக்கும் கட்டிடம் ஒரு மையமாக விளங்கும்.

இக் கட்டிடத்தை அமைப்பதற்காகப் பாராட்டுவதுடன் ஒளிமயமான எதிர்காலத்திற்காக எனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

நன்றி

வணக்கம்.

என்றென்றும் மக்கள் சேவையிலுள்ள,

**கே. என் டக்ளஸ் தேவானந்தா. பா. உ,**

செயலாளர் நாயகம் ஈ.பி.டி.பி.

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு

மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர்.

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவே நாட்டுயர்வு



கூட்டுறவே நாட்டுயர்வு என்பது எம்முடன் கூடிய புதிய மொழி. நாம் கூட்டுறவுக்குப் புதியவர்கள் அல்லர்.

கூட்டுறவுக்குப் பலநோக்குக் கொடுத்த சிறப்பு அமரர் பிலிப்குணவர்த்தனா அவர்களையே சாரும். அவர் நட்ட விருட்சம் இன்று பெருமரமாகி பூத்துக் குலுங்குகின்றது. அதன் பயனை இந் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் அனுபவிக்கின்றார்கள்.

புங்குடுதீவு ~ நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தங்கள் கட்டிடத்திற்கு மேல் ஒரு மாடி அமைத்து இன்று சிறப்பு விழாவினை நடத்துகின்றார்கள்.

இன்று திறக்கப்படும் இம் மண்டபம் ஊருக்கு ஓர் ஊறணி போன்று இக் கிராம மக்களுக்கு உதவியாக அமையப்போகின்றது.

புங்குடுதீவுப்பகுதி மக்களின் கலை, இலக்கிய, பொதுப்பணிகளின் தேவைக்கு இந்த மண்டபம் தோன்றாத் துணையாகவும் தூண்டு கோலாகவும் அமைய வேண்டும் என்பது என் பிரார்த்தனை.

புங்குடுதீவு ~ நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஏனைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைவிட பல விடயங்களில் மாறுபட்ட தன்மையுடையதாக உள்ளது.

குறைந்த தொகை மக்களைக் கொண்ட பிரதேசத்தில் இச்சங்கம் அமைந்துள்ளது. இதனால் இச் சங்கம் பெரிதாக இலாபம் பெற முடியாத அமைப்பாக அமையும் என்று கருதினேன். என் எண்ணத்திற்கும் நினைவிற்கும் மாறாக இச் சங்கம் இலாபம் ஈட்டி இன்று இத்தகைய ஒரு மண்டபத்தை எழுப்பி இருப்பது எனக்கு ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் ஒருசேரத் தருகின்றது.

புங்குடுதீவு ~ நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**க.சண்முகநாதன்**
**அரசஅதிபர்.**

கச்சேரி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்திமடல்



கூட்டுறவு வாழ்க்கைக்கு முன்னுதாரணமாக செயற்பட்டு வரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் வரிசையில் புங்குடுதீவு ~ நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன் உதாரணமாக "கூட்டுறவே நாட்டு உயர்வு" எனும் கொள்கைக்கு இணங்க செயற்பட்டு தீவகத்தின் அபிவிருத்திப் பாதைக்கு மென்மேலும் வலுச்சேர்ப்பது கண்கூடு. மேலும் அதன் பணி தொடர பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**N.மதனராஜா (மனோகரன்)**
**பிரதி அமைப்பாளர்**
**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி**
**யாழ். மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிப்பாதையில் நடைபோட வாழ்த்துகின்றேன்



புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 1977ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்டு தீவக மக்களுக்கு சேவையாற்றி வந்துள்ளது.

1991ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்பு சங்கம் பல நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்து அபிவிருத்திப் பாதையில் சென்றுகொண்டிருந்தது.

நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் தொய்வு ஏற்பட்டது உண்மையே.

1996ஆம் ஆண்டு மீளக் குடியமர்வின் பின் மீண்டும் தீவக மக்களுக்கு விசேடமாக புங்குடுதீவு மக்களுக்கு பெரும் சேவையாற்றி வருகின்றது.

தற்போது சங்கத்திற்குச் சொந்தமான மேல்மாடிக் கட்டிடத்தை திறந்து வைப்பது சிறப்பம்சமாகும்.

இதன் மூலம் புங்குடுதீவு, நயினாதீவு மக்களுக்கு மேலும் சேவையாற்ற முடியுமென நம்புகின்றேன்.

இதே சமயம் புங்குடுதீவு, நயினாதீவு வரலாற்றை உள்ளடக்கிய "கூட்டுறவு தீபம்" என்னும் நூலை வெளியிடுவது போற்றப்படவேண்டிய ஒன்றாகும்.

கூட்டுறவு சம்பந்தமான நூல்கள் அருகிக் காணப்படும் இந்நிலையில் இந்நூல் வெளியீடு கூட்டுறவுத்துறைக்கு பெரிதும் பயன்படும் என்றே கூறவேண்டும்.

மேலும் இச்சங்கம் வெற்றிப்பாதையில் நடைபோட எனது ஆசிகளை கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


**செ.கு.சண்முகநாதன்**
**கூ.அ.உ. ஆணையாளர்,**
**யாழ். மாவட்டம்.**

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



"கூட்டுறவே நாட்டுயர்வு" என்பது ஆன்றோர் வாக்கு. எமது முன்னோர்கள் கூட்டுறவு அடிப்படையில் பல செயற்றிட்டங்களை வகுத்து மக்கள் சேவையை நிறைவேற்றி வந்தார்கள். அண்மைக் கால இடப்பெயர்வு கூட்டுறவுத்துறை அபிவிருத்தியிலும் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டுறவு சேவையில் தம்மை ஈடுபடுத்திச் சேவையாற்றிய பலர் புலம் பெயர்ந்து வாழ்வதாலும், மரணித்தமையாலும், வேறு தொழிற்றுறைகளில் இணைந்து கொண்டமையாலும் கிரமப்புற கூட்டுறவு வரலாறுகள் இந்த சந்ததியுடன் அழிந்து போகக் கூடிய ஓர் அபாய நிலை உள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தனது வரலாற்றினைத் தொகுத்து நூலுருவில் வெளியிட இருப்பது ஒரு நல்ல செய்தியாகும். அத்துடன் பல்வேறு சிரமங்களின் மத்தியில் தனது தலைமையகத்தில் சிறந்த ஒரு மாநாட்டு மண்டபத்தினை உருவாக்கியிருப்பதும் பாராட்டுக்குரிய செயலாகும்.

புங்குடுதீவு, நயினாதீவுப் பகுதியில் உள்ள மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிவரும் இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேலும் பல சேவைகளின் மூலம் இப்பகுதி மக்களின் வளர்ச்சியில் பங்கு கொள்ள இறையருளைப் பிரார்த்தித்து ஆசி கூறுவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

**ப. விக்னேஸ்வரன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்.**
**தீவகம்.**

**வேலணை.**
**02-09-2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனுள்ள சேவை



புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய மேல்மாடிக்கட்டடத் திறப்புவிழா நடைபெறும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நீண்ட கால இடம்பெயர்வுக்குப்பின் தமது சொந்த இடத்துக்கு வந்து மீளக்குடியமர்ந்துள்ள நலிவுற்ற மக்களுக்குத் தன்னாலான சேவையினை வழங்கும் புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிகள் பாராட்டுக்குரியவை.

குறைந்த அளவு மக்கள் தொகையைக் கொண்ட பிரதேசத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கம் பலமான அடித்தளத்துடன் செயற்படுவது இயலாத காரியம். மேலும் அப்படியான இடத்தில் அமைந்துள்ள ஒரு சங்கம் இலாபத்தினை நோக்காது சேவை நோக்குடனேயே செயற்பட வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள நயினாதீவு, புங்குடுதீவு மக்களுக்கு அதுவும் மிகவும் வறிய நிலையிலுள்ள மக்களுக்கு தங்களுடைய அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு யாழ்ப்பாணத்துக்குச் செல்வது இயலாத காரியம்.

அவர்களுடைய பெரும்பாலான தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவனமாக இச் சங்கம் விளங்குகின்றது. இச்சங்கத்தின் இயக்குநர் சபையும், பொது முகாமையாளரும் பிரதேச நிர்வாகத்துடன் புரிந்துணர்வுடன் ஒத்துழைப்பதனால் பல பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு காணக்கூடியதாகவிருக்கின்றது.

கிராமிய வங்கியின் மூலம் ஐக்கிய நாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (யூஎன்டிபி) உதவியுடன் சிறுதொழில் முயற்சிகளுக்கு கடன் வழங்கும் திட்டத்தினை இச்சங்கம் நடைமுறைப்படுத்திவருகின்றது.

அண்மையில் எனது பணிமனைக்கு வருகைதந்திருந்த யூஎன்டிபி பிரதிநிதி இக் கடன் திட்டத்தினை புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வெற்றிகரமாகச் செயற்படுத்துகின்றது என மனந்திறந்து பாராட்டிச் சென்றமையையும் இவ்விடத்தில் நினைவுகூருவது பொருத்தமென எண்ணுகின்றேன்.

இச்சங்கம் மென்மேலும் வளர்ச்சியடைந்து நீண்டகால இடப்பெயர்வுக்குப் பின்னர் தமது சொந்த மண்ணுக்கு மீண்டும் வந்து குடியேறி அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வரும் எமது உடன் பிறப்புகளுக்கு பயனுள்ள சேவையினை வழங்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**செ. இரத்தினம்**
**பிரதேச செயலர், உ.அ.அ.,**
**வேலணை.**

**வேலணை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



புங்குடுதீவு ~ நயினாதீவு ப.நோ.கூ. சங்கத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி இன்று திறந்து வைப்பதையிட்டும் அதனோடு இணைந்ததான நினைவு மலர் வெளியிட்டு வைப்பதையும் இட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் மாவட்டத்தில் நீண்டதொரு வரலாற்றைக் கொண்ட கூட்டுறவுத் துறையில் புங்குடுதீவு ப.நோ.கூ. சங்கத்தின் ஸ்தாபிதம், அதன் வளர்ச்சி, மக்களுக்கான சேவை மிகவும் காத்திரமானதும் எல்லோராலும் மதிக்கப்படக்கூடிய தாகவும் ஏனைய கூட்டுறவு அமைப்புகளுக்கு ஓர் முன்னோடிச் சங்கமாக செயற்பட்டு வந்திருப்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர்.

பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கிய போதும் எல்லா சவால்களையும் முறியடித்து குறிப்பாக சொல்லப்போனால் 1991ஆம் ஆண்டு தீவுப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது பாரிய சொத்திழப்பையும், நிதி நெருக்கடியையும் எதிர்நோக்கிய போதும், இடம்பெயர்ந்திருந்த வேளையிலும் தனது மக்களுக்கு சிறப்பான சேவையாற்றியதை யாவரும் அறிவர்.

மேலும் தீவுப்பகுதியில் மீளக் குடியமர்வு ஆரம்பித்ததும் உடனடியாகவே மீளக்குடியமர்ந்த மக்களுக்காக தனது சேவையை தொடங்கியது தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றன. இந்த வளர்ச்சியின் ஒரு படியாக இன்று புதிய கட்டிட தொகுதி திறந்து வைத்திருப்பது அமைகின்றது.

இச்சங்கத்தின் திறமையான செயற்பாட்டிற்கு ஆதாரமாக அமைந்திருப்பவர்கள் இச் சங்கத்தின் பணிப்பாளர்களும், பணியாளர்களும் ஆவர். அவர்கள் என்றும் பாராட்டுக்குரியவர்கள். தங்கள் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

சங்கத்தின் பணி தொடரவும் மக்கள் சேவையே தங்கள் சேவையென என்று பணியாற்றிவரும தலைவர், பொது முகாமையாளரையும் விசேடமாகப் பாராட்டி வாழ்த்தும் நன்றியும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஜே. எக்ஸ். செல்வநாயகம்
உதவி அரசாங்க அதிபர்,
ஊர்காவற்றுறை.

ஊர்காவற்றுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



தீவக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு முக்கிய இடத்தை வகித்த பெருமை புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உண்டு.

1991 இடப்பெயர்வின் பின்பும் இப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்காக இச் சங்கம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருவது பாராட்டுக்குரியது.

பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு, போட்டிச் சந்தையில் நிலைத்து நிற்பதற்காக கூட்டுறவுத்துறை தன்னை மாற்றியமைத்து தயார்படுத்தும் நேரம் இது.

இந்த வேளையில் புதியதோர் கட்டிடத்தை அமைத்து திறப்புவிழாச் செய்வது மகிழ்ச்சிக்குரியது.

இந்தப் பணியில் முன்னின்று உழைத்த இச்சங்கத்தின் தலைவர், இயக்குநர்கள், பொது முகாமையாளர் உள்ளிட்ட பணியாளர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

**சி.வி.கந்தையா சிவஞானம்.**
**தலைவர்,**
**யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக்**
**கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - வ.து.)**

**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



புங்குடுதீவு – நயினாதீவு ப.நோ.கூ. சங்கம் வெளியிடும் கூட்டுறவுத் தீபம் என்னும் மலருக்கு ஆசியுரை வழங்குவதையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மலர், தீவகப் பகுதியில் கூட்டுறவு சேவையையும் அதன் மூலம் கூட்டுறவு அடைந்த வளர்ச்சியையும் கூட்டுறவின் அவசியத்தையும் மக்கள் அறிய பெரிதும் உதவியாக அமையும் எனக் கருதுகின்றேன்.

தீவகத்தில் ஒரு முன்னோடியான இச்சங்கம் பல இழப்புக்களுக்கு மத்தியிலும் தனது சேவையினை ஆற்றி வருவது பாராட்டுக்குரியது.

இச்சங்கம் மேலும் தனது சேவையை விஸ்தரித்து மக்களுக்குப் பணியாற்ற எல்லாம் வல்ல நாகபூஷணியை பிரார்த்திக்கின்றேன்.


**பொ. கனகசபாபதி**
**தலைவர்**
**யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை.**

**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் "கூட்டுறவுத் தீபம்" எனும் நூலை இந்த ஆண்டு சிறப்பு மலராக வெளியிடுவது வரவேற்கத்தக்கது.

கூட்டுறவுச் சங்கங்களின் சேவை மக்களோடு இணைந்த சேவை. இச்சேவை மக்களுக்காக ஆற்றப்பட்ட சேவை. இப்பணி சிறப்புற, கூட்டுறவின் முக்கியத்துவம் உணரப்பட, கூட்டுறவுத்தீபத்தின் ஊடாக மக்களுக்கு பணி செய்ய இது அரிய சந்தர்ப்பம்.

'மக்கள் சேவை மகேசன் சேவை' என்பதற்கிணங்க மக்கள் சேவை வளம்பெற வாழ்த்துகிறோம்.

**சு.திசநாயகம்பிள்ளை,** B.A.Dip.in.Ed., J.P
**தலைவர்,**
**வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**

**வேலணை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியும் நல்வாழ்த்தும்



புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், 'கூட்டுறவுத் தீபம்' என்னும் இந் நூலை வெளியிடுவதில் பெரிதும் உவகை அடைகின்றேன்.

மேற்படி சங்கம் பல்வேறு இடர்கள் மத்தியிலும் கூட்டு இலட்சியப் பாதையில் 1996ஆம் ஆண்டு முதல் மீண்டும் தன் எல்லைப்பரப்பில் தடம் பதித்து குன்றெனத் திகழ்கின்றது.

இது கூட்டுறவு இயக்கத்திற்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்.

உண்மை, தியாகம், நேர்மை, நீதி, மக்கள்சேவை இவற்றைத் தொய்வுறாது சேவையாற்றும் சங்கத்தின் தலைவர், பணிப்பாளர்கள், பொது முகாமையாளர், பணியாளர்கள், அங்கத்தவர்கள் ஆகியோர் இவ்விடத்தில் பெரிதும் நினைவு கூரத்தக்கதும் பாராட்டத்தக்கவருமாவர்.

அந்தவகையில் இக்கூட்டுறவுச் சங்கம் மென்மேலும் கூட்டுறவு இலட்சியத்துடனான சேவையில் தொடரவேண்டுமென ஆசிக்கின்றேன்.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"


**த. சத்தியநாதன்**
**அதிபர் - யாழ்.நாரந்தனை றோ.க. மகா வித்தியாலயம்**
**தலைவர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**ஊர்காவற்றுறை.**

**ஊர்காவற்றுறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவினை யொட்டி வெளியிடப்படும் கூட்டுறவு தீபம் என்னும் இம் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகவும் உளம் மகிழ்கின்றேன்.

1979ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தின் எல்லைப் பரப்பின் கீழ் நெடுந்தீவில் பல கிளைகள் இயங்கி வந்தன. இத் தீவகத்தைச் சேர்ந்த பெருந்தொகையான அங்கத்தவர்கள் அங்கம் வகித்ததால் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக திரு.இரா.சின்னத்தம்பி – ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், திரு.ச.சுப்பிரமணியம் – பதிவாளர் அவர்கள், திரு.நா.ம.எட்வேட் – சமாதான நீதிவான அவர்கள் திரு.ச.மனுவேற்பிள்ளை ஆசிரியர் அவர்கள் பணிப்பாளர்களாக சங்க வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட கூட்டுறவாளர்கள் என்பதையும் இவ் வேளையில் நினைவு கூருகின்றேன்.

இத் தீவகத்தைச் சேர்ந்த சிலர் அக்கால கட்டத்தில் பணியாளர்களாக பணியாற்றியுள்ளார்கள். அவர்கள் தற்பொழுது ஆளுமையும், ஆற்றலும் மிக்க பொது முகாமையாளர்களாகவும், கணக்காளர்களாகவும் பணியாற்றுகின்றார்கள் என்றால் அதற்கு காரணம் புங்குடுதீவு பல.நோ.கூ. சங்கத்தின் ஜனநாயக ஆளுமையும் நிர்வாகத் திறமையும் கொண்ட தலைமைத்துவத்தின் கீழும், முகாமையின் கீழும் பணியாற்றியதன் பயன் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கூட்டுறவாளர்கள் பிரதிபலிக்கக் கூடிய வகையில் கூட்டுறவின் மூலம் சமுதாய முன்னேற்றத்தை ஏற்படுத்த விளைந்த ஒரு சில பெரியோரினால் தாபிக்கப்பட்டு கூட்டுறவு முன்னோடிகளால் வளர்த்தெடுக்கப்பட்டு இன்று பலரும் பயன் பெறும் வகையில் பெரும் பணியை செவ்வனே செய்து வரும் இத் தாபனம் இன, மத வேறுபாடின்றி "கூட்டுறவே நாட்டுயர்வு" என ஆற்றும் சேவை மென்மேலும் வளர்ச்சி பெறவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும், மலர் வெளியீட்டு விழாவும் சிறப்புற வாழ்த்துவதுடன் கூட்டுறவுத்துறை மென்மேலும் பன்மடங்கு வளர்ந்தோங்க நெடுந்தீவு பல.நோ.கூ. சங்க சார்பில் என் நல் வாழ்த்துக்கள்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
**சுப்பிரமணியம் கணேசலிங்கம்**
உப தலைவர்,
நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம்.

நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புங்குடுதீவு - நயினாதீவு
எல்லைப்பரப்புப் படகுச் சேவையில் பணியாற்றுபவர்கள்



புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின்
புங்குடுதீவு எல்லைப்பரப்பில் பணியாற்றும் பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வி. சிவசாமி**
**பேராசிரியர் - சமஸ்கிருதத்துறை**
**யாழ். பல்கலைக்கழகம்**


# புங்குடுதீவின் சமய, பண்பாட்டு மரபுகள்

இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப் பாணக் குடாநாட்டினை அடுத்துள்ள பல தீவுகளில் வேலணைத் தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரை தீவு (காரைநகர்) எனும் ஏழு தீவுகளும் குறிப்பிடற்பாலன. இவை சப்த(ஏழு) தீவுகள் அல்லது தீவகம் எனவும் அழைக்கப்படும். யாழ்ப்பாணக் குடாநாடு போல தீவகமும் ஏறக்குறைய 2,500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால வரலாறு கொண்டதாகும்.

ஏனைய தீவுகளைப்போலவே இதுவும் நாலாபக்கமும் கடலாலே சூழப்பட்டு ஏனைய பிரதான தீவுகளுக்கு நடுவண் அமைந்துள் ளது. இத்தீவு "ப" வடிவிலானது. இதிலே சில ஓடைகளும், முனைகளும் உள்ளன. யாழ்ப்பாண நகருக்கும் இதற்கும் இடையில் வேலணைத் தீவும் இருகடல்களும் உள் ளன. இதுவும் வேலணைத் தீவும் அம்பல வாணர் தாம்போதியாலும், வேலணைத்தீவும், யாழ்ப்பாண நகரும் பண்ணைத் தாம்போதி யாலும் இணைக்கப்பட்டுள்ளன. கடந்த ஐம் பது ஆண்டுகளுக்குள்ளேயே இத் தாம்போ திகள் அமைக்கப்பட்டவை. இவற்றின் மூலம் மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாகப் போக்குவரத்து சுலபமாகவும், குறுகிய காலத்திலே செய்யக்கூடியதாகவும் ஏற்பட்டுள்ளது.

இத்தீவு 11.2 சதுரமைல் கொண்டதாகும். யாழ்ப்பாணக் குடாநாடு போன்று ஏனைய தீவுகளும் மயோசீன் காலத்தில் கடலிலி ருந்து சுண்ணாம்புக் கற்பாறைத் திடலாக உயர்த்தப்பட்டவை எனக் கூறப்படுகிறது. இங்குள்ள மண் பொதுவாகச் சாம்பல் நிற முள்ளதாகும். சில இடங்களில் குறிப்பாக வடகிழக்கு, தென்கிழக்குப் பகுதிகளில் மணலும் காணப்படுகின்றது. நிலத்தின் கீழே சுண்ணாம்பு மக்கியும் சில இடங்களில் கற்பாறைகளும் உள்ளன. எனினும் மழை நீரைக் குறிப்பிட்ட காலத்திற்குத் தேக்கி வைக்கக்கூடிய தன்மை குறைவு.

இங்கு தரைத்தோற்றம் பொதுவாகச் சமமாகவே காணப்படுகின்றது. ஆக உயர்ந்த பகுதிகளான மாவுதிடல், வீராமலைப் பகுதி கள் 10 - 15 அடி உயரமுடையதாகும். இவை தென்கிழக்கில் உள்ளன. இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவமழை பொதுவாக ஒக்டோபர் தொடக்கம் டிசம்பர் வரை பெய்யும். மேலும் மார்ச், ஏப்ரல், மே, ஜூலை, ஆகஸ்டு, செப்டெம்பர் மாதங்களில் சிறிதளவு சில ஆண்டுகளில் பெய்யும். வரட்சியே கூடுதலாக உள்ளது. ஆண்டுதோறும் சராசரி மழைவீழ்ச்சி 40 - 50 அங்குலமாகும்.

இங்கு தமிழர்களே வாழ்கின்றனர். இங்கு முற்காலத்திலிருந்து வாழ்ந்துவந்த மக்கள் தொகையை அறியமுடியாதுள்ளது. கி.பி. 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த போர்த்துக்கீச மதகுருவான குவேறோஸ் சான்றுப்படி புங்குடுதீவிலே 800 மக்கள் வாழ்ந்தனர். ஏறக்குறைய இதே காலத்தைச் சேர்ந்த ஒல்லாந்த மதகுருவான போல்டேய்ஸ் என்பவரும் இத்தொகையினைக் குறிப்பிடுகிறார். 1824ஆம் ஆண்டு இலங்கைக் குடிக்கணிப்புப்படி 1802 மக்களும், 1834லே வெளியிடப்பட்ட சைமன்காசிச் செட்டியின் நூலின்படி 2415 மக்களும், இலங்கைக் குடிக்கணக்கின்படி 1871இல் இங்கு 3966 மக்களும், 1971ல் 13,766 மக்களும், 1981ல் 14,622 மக்களும் வாழ்ந்தனரென அறியப்படுகிறது. 1991ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் இங்கு 837 மக்கள் வாழ்ந்தனர். இப்பொழுது (2001) சுமார் 2000 மக்கள் வாழுகின்றனர்.

இத்தீவிலே நிலவி வந்துள்ள சமய, பண்பாட்டு மரபுகள் பற்றிச் சுருக்கமாக இக் கட்டுரையில் கூறப்படும். இவ்விடயங்கள் பற்றி தகவல்கள் செவ்வையாக, ஒழுங்காக பதிவுசெய்யப்பட்டும் பேணப்படாத காரணத்தால் இவை பற்றி விபரமாகவோ, உறுதியாகவோ கூறமுடியாதுள்ளது. இதைவிட 1991ல் ஏற்பட்ட பெரிய அளவிலான மக்கட் புலப்பெயர்ச்சியினாலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகளாலும் எஞ்சி இருந்த தகவல்களையும் சில அறிஞர் சேகரித்து வைத்திருந்த அரிய நூல்களையும் பிறவற்றையும் பெருமளவு இழக்க நேரிட்டது. எனினும் எஞ்சி இன்று கிடைக்கக் கூடிய சில தரவுகளின் அடிப்படையிலே சில கருத்துக்களைக் குறிப்பிடலாம்.

இங்கு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் திராவிடர் குறிப்பாகத் தமிழர் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் மத்தியிலே இந்துசமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் நிலவின எனலாம். கி.மு. 3ஆம் நூற்றாண்டில் இலங்கையிலே பௌத்தம் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இங்கும் பௌத்தம் பரவிற்று. தனிப்பட்ட காடுகள் போலத் தனிமையான தீவுகளும் சமய ஞானிகளின் தியானத்திற்கு உகந்தவையாக விளங்கிவந்துள்ளன. இவ்வகையில் இந்து, பௌத்த துறவிகளுக்கு ஏற்ற இடமாகவும் தீவுகள் விளங்கின. மகாவம்சம் போன்ற நூல்களின் படியும், கல்வெட்டின் படியும் புங்குடுதீவு முற்காலத்திலே புகழ்பெற்ற ஒரு பௌத்த கேந்திர நிலையமாக விளங்கியதாகக் கூறப்படுகிறது. இங்கு 1200 பௌத்த குருமார் இருந்தனர் எனவும், இவர்களில் சிலர் மிக உயர்ந்த பௌத்த ஞான நிலையிலுள்ள "அர்ஹந்த்தஸ்களாக" விளங்கினர் எனவும் மகாவம்சம் கூறும். அவர்களில் எண்மர் எல்லாளனுக்கு எதிராகத் துட்டகாமினி (கைமுனு) நடத்தி வெற்றி பெற்ற போரிலே பெருந்தொகையினர் கொல்லப்பட்டமை குறித்துத் துட்டகாமினி (கி.மு. 2ம் நூற்றாண்டு) மிகவும் மனம்நொந்த போது அவனுக்கு ஆறுதல்கூறி அவனைத் தேற்றினர் எனவும் இந்நூல் கூறுகின்றது. மேலும் வடமராட்சியிலுள்ள வல்லிபுரத்திலே சென்ற நூற்றாண்டிலே கிடைத்த கி.மு.2ம் நூற்றாண்டைச் சேர்ந்த வசபனின் சாசனத்திலே நாக தீபத்தினை (யாழ்ப்பாணக்குடா நாட்டினை / வடஇலங்கையை) அவனுடைய மந்திரியான இசிகிரிய என்பவன் ஆட்சி நடத்திய போது பியகுகதிஸ என்பவன் ஒரு விகாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் கட்டினான் எனக் கூறப்பட்டுள்ளது. இதிலேவரும் பியகுதிஸ என்பதைப் பியங்கு தீபத்தை (புங்குடுதீவைச்) சேர்ந்த திஸ எனவும் ஒரு சாரார் பொருள் கொள்ளுவர். எனவே கிறிஸ்துவுக்கு முற்பட்ட, பிற்பட்ட இருநூற்றாண்டுகளில் இத்தீவிலே பௌத்தம் நன்கு நிலவியிருக்கலாம். கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததும், இலங்கையிலுள்ள பௌத்த புனித இடங்களைக் குறிப்பிடுகின்றதுமான நம்பொத்த எனும் நூலிலே யாழ்ப்பாணத்திலுள்ள பௌத்த தலங்களில் ஒன்றாகப் புங்குடுதீவும் கூறப்படுகின்றது. எனவே இங்கு ஒரு நீண்டகாலப் பௌத்த பாரம்பரியம் நிலவியிருக்கலாம்.

இலங்கையின் வேறு பல இடங்களைப் போலவே இந்துசமயமும், பௌத்தமும் அக்கம்பக்கமாகத் தொன்றுதொட்டு நிலவிவந்தன எனலாம். மேலும் இங்கு வாழ்ந்த பௌத்தர்களில் தமிழ்ப் பௌத்தரும் இருந்திருப்பர். ஒருகாலகட்டத்திலே தமிழ்நாட்டிலே பௌத்தம் நன்கு நிலவியிருந்தமை குறிப்பிடற்பாலது. அங்கும் இந்துசமயத்துடன் பௌத்தமும், சமணமும் நிலவிவந்துள்ளன. மேலும் புங்குடுதீவு திகழியிற் பெறப்பட்ட புத்தர் சிலை ஆந்திரதேச பௌத்தக்கலை மரபையொத்துள்ளது. மேலும் சில பௌத்த சிலைகள் இங்கு காணப்பட்டதாக அறியப்படுகிறது. ஆனால் அவற்றிற்கு என்ன நடந்ததென்பது தெரியாது. தமிழ்நாட்டிலே கி.பி. 6ம் நூற்றாண்டுப் பிற்பகுதியிலேற்பட்ட சைவ, வைணவசமய மறுமலர்ச்சி, குறிப்பாகப் பக்தி இயக்கத்தின் விளைவாகத் தமிழ் நாட்டிற் போன்று இங்கும் சில இடங்களில் புத்தசமயத்திற்குப் பின்னடைவு ஏற்பட்டு வைதிக சமய மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கலாம்.

தமிழகத்திலே பல்லவர் - பாண்டியர் காலத்திலும் (கி.பி. 6 - 9ம் நூற்றாண்டுவரை) சோழப்பெருமன்னர் காலத்திலும் (கி.பி. 9 - 12ம் நூற்றாண்டுவரை) தொடர்ந்து ஏற்பட்ட பாண்டியப் பேரரசு (கி.பி. 13ம் நூற்றாண்டு) காலத்திலும் இலங்கையிலே இந்து சமயச் செல்வாக்கு முன்னிலையிலும் அதிகரித்தது. கி.பி. 13ஆம் நூற்றாண்டு நடுப்பகுதியிலே பாண்டியப்பேரரசு அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு தமிழரசு ஒன்று நிறுவப்பட்டது. அது கி.பி. 1619லே போர்த்துக்கீசர் அதனைக் கைப்பற்றும் வரை நிலவிற்று. மேற்குறிப்பிட்ட தமிழரசு காலத்திலே இந்துசமயச் செல்வாக்கு மேலும் அதிகரித்தது. தொடர்ந்து ஏற்பட்ட போர்த்துக்கீசர் காலத்திலே (கி.பி. 17ம் நூற்றாண்டின் முற்பகுதி) கத்தோலிக்கமும், ஒல்லாந்தர் காலத்திலே (கி.பி. 1656 - 1796வரை) புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமயமும் மேலோங்கின. எனினும் பிரித்தானியர் காலத்திலே (1796 - 1948 வரை) பொதுவாக சமயசுதந்திரம் நிலவிவந்தது. 19ம் நூற்றாண்டிலே இந்துசமயம் ஆறுமுகநாவலர் தலைமையிலே மறுமலர்ச்சி அடைந்தது. புங்குடுதீவிலே பொதுவாக இந்துசமயப் பாரம்பரியம் நிலவிவந்துள்ளது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்திய கிறிஸ்தவ சமய நினைவுச் சின்னங்கள் எவையேனும் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. இன்று இங்குள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள் 19ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவர்களுடைய போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களிலே மக்கள் கிறிஸ்தவ தேவாலயங்களுக்குச் செல்வதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டனர். அதேவேளையில் இந்து சமயக் கோவில்கள் மிகவும் பாதிப்புற்றன. ஆனால் ஒல்லாந்தர் ஆட்சி முடிவிலும் பிரித்தானியர் ஆட்சி தொடங்கிய பின்னரும் ஐரோப்பாவிலேற்பட்ட தாராள சிந்தனைகளைத் தொடர்ந்து மதசுதந்திரம் ஏற்படலாயிற்று. எனவே யாழ்ப்பாணத்தின் ஏனைய இடங்களிற் போலவே இங்கு இந்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்கள் பல அமைக்கப்பட்டன. இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளவற்றுள் 19ஆம் நூற்றாண்டு முற்பகுதியிலே மாரியம்மன்கோயில் (1800), கிராஞ்சியம்பதி கந்தசுவாமிகோவில் (1805), முருகமூர்த்தி கோயில் (1805), கண்ணகியம்மன் கோயில் (1805) இறுப்பிட்டி அம்மன் கோயில் (1815), மூத்த நயினாபுலம் வீரகத்தி விநாயகர் கோயில் (1820), குறிகட்டுவான் பேய்ச்சி அம்மன் (மனோன்மணி) கோயில் (1850), பெரியபுலம் பிள்ளையார் கோயில் (1800), நாச்சிமார் கோயில் (1810), ஐயனார் கோயில் (1850) முதலியன குறிப்பிடற்பாலன. இங்குள்ள பிள்ளையார் ஆலயங்கள் பலவற்றையும் யாழ்ப்பாணத்திலும் பல பிள்ளையார் ஆலயங்களையும் இனங்காத்த முதலியென்பவர் நிறுவினார் என்று கூறப்படுகிறது. ஆனால் இவரைப்பற்றிய தகவல்கள் பிரம்பமாகக் கிடைத்த பின்பே இதுபற்றிக் கூடுதலாகக் கூறமுடியும். மூன்று முருகன் ஆலயங்கள் உள்ளன. முத்துமாரியம்மன், கண்ணகி அம்மன் (ராஜராஜேஸ்வரி), பேய்ச்சி அம்மன், காளிஅம்மன், பட்டையார் அம்மன் எனப்பல அம்மன் ஆலயங்கள் உள்ளன. இரு நாச்சிமார் கோயில்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று சென்ற நூற்றாண்டிலே முருகன் ஆலயமாக மாற்றப்பட்டுள்ளது. இதுபோலவே கண்ணகி அம்மன், பேய்ச்சி அம்மன் ஆலயங்கள் முறையே ராஜராஜேஸ்வரி, மனோன்மணி ஆலயங்களாகிவிட்டன. 19ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட ஊரதீவு பாணாவிடை ஐயனார் ஆலயம் சிவாலயமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முன்னர் ஆகமமரபைச்சாராத கோவில்களில் சில ஆகமமரபிற்கேற்றவாறு மாற்றமடைந்துள்ளன. எனினும் பொதுமக்கள் பலர் இவ்வாலயங்களைப் பழைய பெயர்களாலேயே அழைத்துவருவதும் குறிப்பிடற்பாலது. வைரவர், ஐயனார் கோயில்களை இத்தீவின் பல இடங்களில் காணலாம். மேலும் பத்திர காளி, நாகதம்பிரான், அநுமான், பெத்தப்பு கோயில்களும் உள்ளன.

இங்குள்ள இரு சிவன்கோவில்களும் 20ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டவை. இவற்றுள் ஒன்று ஏற்கனவே குறிப்பிட்டவாறு ஐயனார் ஆலயமாக விளங்கிப் பின்னர் மாற்றம் அடைந்துள்ளது. கிராஞ்சியம் பதியிலுள்ள மற்றைய சிவாலயம் - மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயம் - நித்திய பூசைகள், நைமித்திய கிரியைகள், விழாக்கள் ஒழுங்காக நடைபெறும் கோவில்களிலொன்றாகும். இங்குள்ள ஆலயங்களை அமைப்பதிலும், சிறப்பாக நிர்வகிப்பதிலும் பொதுமக்கள் மட்டுமன்றிக் குறிப்பாக அரசஊழியர்கள், வர்த்தகப் பெரு மக்களின் பங்களிப்புக்கள் நன்கு குறிப்பிடத் தக்கவை. இங்குள்ள சுமார் 15 ஆலயங்கள் மகோற்சவம் நடைபெறும் ஆலயங்களாகும். இவற்றுட் சிலவற்றிற்கு ராஜகோபுரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் 1991ல் ஏற்பட்ட மக்கள் புலப்பெயர்ச்சியால் பல ஆலயங்கள் நன்கு பாதிக்கப்பட்டுள்ளன. சிலவற்றிற்கு ராஜகோபுர அத்திவாரம் இடப்பட்டு முற்றுப்பெறாமல் உள்ளது. எனினும் பல ஆலயங்களில் மீண்டும் நித்திய பூசைகளும், சிலவிழாக்களும் தொடக்கப்பட்டுள்ளன.

நாவலர் பெருமான் முன்னெடுத்த கந்தபுராண கலாசாரம் நன்கு நிலவிவந்துள்ளது. நாவலரின் சிஷ்ய பரம்பரையினர் சிலர் வேலணையிலும், இங்குமிருந்தனர். அவர்களில் ஒருவர் கந்தப்பிள்ளை. அவர் வேலணையிலே வாழ்ந்தாலும் அவரின் முன்னோர் புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள். வேலணையைச் சேர்ந்த "சைவ" நாகலிங்கம் என்பவரின் பல மாணவர்கள் இங்கு இருந்தனர். இங்குள்ள சில கோயில்களில் குறிப்பாக இறுப்பிட்டி மூத்த நயினாபுலம் வீரகத்தி விநாயகர் ஆலயம், கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில், கலட்டி விநாயகர் ஆலயம், மடத்துக்கள பிள்ளையார் ஆலயம் முதலியன வற்றிலே பல ஆண்டுகளாக கந்தபுராணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படனம் பக்தி பூர்வமாக நடைபெற்றுவந்துள்ளது. கந்தபுராணத்திற்கு உரைசொல்லுவோர்களில் ச.வினாசித்தம்பி ஆசிரியர், நா.சின்னத்தம்பி ஆசிரியர், நா.தில்லையம்பலம் ஆசிரியர், வைத்தியர் க.கணபதிப்பிள்ளை, க.சதாசிவம்பிள்ளை ஆசிரியர், கை.நாகமணி, க.சேதுபதி ஆசிரியர், வித்துவான் பொன்.கனகசபை முதலியோர் குறிப்பிடற்பாலர். புராணம் வாசிப்பதிலும் பல ஆசிரியர்களும் பிறரும் மிக்க தேர்ச்சி பெற்றிருந்தனர். இவர்களில் ஆ.கந்தையா, நா.அப்பாப்பிள்ளை, க.சுப்பிரமணியம், கு.விநாயகமூர்த்தி, மா.பரராஜசிங்கம் ஆசிரியர், க.கணபதிப்பிள்ளை, நாகலிங்கம், தி.சதாசிவம் ஆசிரியர் முதலியோரைக் குறிப்பிடலாம்.

புராணபடனம் சமயஅறிவை மட்டுமன்றித் தமிழறிவையும் மக்களிடத்தே வளர்க்க நன்கு உதவிற்று. கந்தபுராணத்தைச் செவிவழியாகக் கேட்டும் மனனம் செய்த ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் இருந்தனர். கந்தபுராணத்தைவிட சைவத்திருமுறைகளிலும், வேதங்கள், ஆகமங்கள் முதலியனவற்றிலும் தேர்ச்சிபெற்ற அந்தணப் பெருமக்கள் இங்கு வாழ்ந்துவந்தனர். இவ்வகையில் சாமிநாதக் குருக்கள், ஐ.கைலாசநாதக்குருக்கள், தி. சதாசிவக்குருக்கள், பொ.சொர்ணலிங்கக் குருக்கள், ஸ்ரீநிவாசக்குருக்கள் போன்றோரைக் குறிப்பிடலாம். தமிழிலும், சைவசமயம், சைவசித்தாந்தம் ஆகியனவற்றிலும் மிகத் தேர்ச்சியுள்ளோரிலே வைத்தியர் க.கணபதிப்பிள்ளை, வித்துவான் பொன்.கனகசபை, வித்துவான் சி.ஆறுமுகம், க.சதாசிவம்பிள்ளை, பண்டிதர் வி.வ.நல்லதம்பி, பண்டிதர் மு.ஆறுமுகம், க.சிவராமலிங்கம் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களிலே க.கணபதிப்பிள்ளை சித்தவைத்தியராக விளங்கியதோடு சைவசித்தாந்தத்திலே மிக்க புலமையுள்ளவராக விளங்கினார். சிவாச்சாரியார்கள் உட்படப் பலர் அவரிடம் சைவசித்தாந்தம் பற்றி அறிந்து தெளிவு பெற்றனர். இவருடைய சகோதரர் க.சதாசிவம்பிள்ளை ஆசிரியரும் தமிழிலும், சைவத்திலும் மிக்க புலமை பெற்றிருந்தார். இவர் கவிஞரும் ஆவார். இவர் பல கட்டுரைகளையும், சில நூல்களையும் எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்று திருக்கேதீச்சரத்திலுள்ள அம்பாள் பற்றிய "கௌரியம்மை பிள்ளைத்தமிழ்" எனும் நூலாகும். வித்துவான் பொன்.கனகசபையும் பலகட்டுரைகளும், நூல்களும் எழுதியுள்ளார். இருவரும் ஒரு கவிஞர். சைவசித்தாந்த நூல்கள் சிலவற்றிற்கு உரை எழுதியுள்ளார். இங்குள்ள சில ஆலயங்கள் மீது பாடல்கள் இயற்றியுள்ளார்.

பிரபல வைத்திய, சோதிடர் சி.குருமூர்த்தி சாஸ்திரியார் சைவசமயத்திலும், சைவசித்தாந்தத்திலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர். கவிபாடும் திறனுடையவர். இவரின் செயற்பாடுகள் மலேசியாவிலும் பல ஆண்டுகள் இடம்பெற்றன. அங்கு 1940ம் ஆண்டு "அறிவானந்த ஞானகுருதீபம்" எனும் சைவசமய நூலை வெளியிட்டுள்ளார். இவர் புங்குடுதீவிலுள்ள சில ஆலயங்கள் பற்றிப் பாடல்களும், செல்வச்சந்நிதி முருகன் பற்றி "செல்வச்சந்நிதி முருகன் நான்மணிமாலை" யும் இயற்றியுள்ளார். மேலும் மலேயாவில் "நிப்பன் (யப்பான்) ஆட்சியின் நிஷ்டூரங்கள், எனும் கும்மிப்பாடலையும் இவர் இயற்றியவர். 19ம் நூற்றாண்டிலிங்கு வாழ்ந்த இராமலிங்கச் சட்டம்பியார் கேரநகர் (கேரதீவு), அரிகரபுத்திரப் (ஐயனார்) பதிகம் பாடியுள்ளார். இதைவிடக்கப்பற்பாட்டு, புயற்பாட்டு முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவர்களைவிட இங்குள்ள பல ஆலயங்கள் பற்றிப்பலர் பாடல்கள் இயற்றியுள்ளனர்.

இங்குவாழ்ந்த சைவப் பெரியார்களில் வை.பசுபதிப்பிள்ளை நன்கு குறிப்பிடற்பாலர். இவர் தமிழ், ஆங்கிலம், சைவசமயம், சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்தம் முதலியனவற்றிலே சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார். விதானையாராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்தவர். சுமார் 25 ஆண்டுகளாகப் புங்குடுதீவு கிராமசபைத் தலைவராக விளங்கிப் பல சமய, சமூகத் தொண்டுகள் புரிந்தவர். இங்கு கணேசவித்தியாசாலை போன்ற சில சைவப் பாடசாலைகளை நிறுவியவர்; சைவவித்தியாவிருத்திச் சங்கச் செயலர் ராஜரத்தினத்துடன் சேர்ந்து வேறு பாடசாலைகள் அமைத்தற்கும் உதவியவர். அந்தணச் சிறுவர்களுக்கு வேதாகமக் கல்வியையும், கிரியைகளையும் நன்கு புகட்டுவதற்காகச் சென்ற நூற்றாண்டின் நாற்பதுகளில் இவர் ஒரு வேதாகம பாடசாலையினை கிராஞ்சியம்பதியிலே நிறுவிப் பாடசாலை ஆசிரியர்கள் முதலியோரின் உதவியுடன் சுமார் இரு தசாப்தங்களுக்கு நடாத்திவந்தார். அப்பாடசாலை ஆசிரியராக இந்தியாவைச் சேர்ந்த கி.நாராயண சாஸ்திரிகள் விளங்கினார். வை.பசுபதிப்பிள்ளை யாழ்ப்பாணத்திலும் ஒரு வேதாகம பாடசாலை நிறுவமுயன்றார். ஆனால் அம்முயற்சி வெற்றி பெறாது சிலர் தடுத்தனர். இங்கு கல்விகற்றவர்கள் பலர் இன்று பிரபல சிவாச்சாரியார்களாக விளங்குகின்றனர். இவ்விடத்தைச் சேர்ந்தவரும், சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தலைவருமான சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்களும் இப் பாடசாலையிலே கல்வி பெற்றவர் என்பது குறிப்பிடற்பாலது.

இவ்விடத்தைச் சேர்ந்த சைவப் பெரியார்கள் ஞானிகளில் ஏற்கனவே குறிப்பிட்டோரை விட, விதானை சந்திரசேகரத்தின் சகோதரர் (19ம் நூ.) சரவணமுத்து சுவாமிகள், சுப்பிரமணிய சுவாமியார், ம.நமச்சிவாய தேசிகர் முதலியோரைக் குறிப்பிடலாம். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கு 15 பாடசாலைகள் நன்கு செய்யப்பட்டு கல்விப்பணி செய்து வந்தன. ஆனால் இன்று ஐந்து பாடசாலைகளே இயங்கிவருகின்றன. 19ம் நூற்றாண்டிலே மூன்று அமெரிக்கன் மிஷன் பாடசாலைகளும் பின்னர் பல சைவப் பாடசாலைகளும், ஒரு உரோமன் கத்தோலிக்க பாடசாலையும் அமைக்கப்பட்டன. 1946ம் ஆண்டு அரசினர் கனிஷ்ட ஆங்கில பாடசாலை தொடக்கப்பட்டது. இ∴து இன்று புங்குடுதீவு மகாவித்தியாலயமாக விளங்குகின்றது. தமிழுடன் ஆங்கிலக் கல்வியை முன்னெடுப்பதில் இந்நிறுவனம் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளது. இங்கு கற்ற மாணவர்களில் பலர் அரசாங்க சேவையிலும், வேறு நிறுவனங்களிலும் சிறப்பாகப் பணிபுரிந்து வந்துள்ளனர்.

இவ்விடத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு சாரார் அரசாங்கசேவை, பல்கலைக்கழகங்கள், தனியார்சேவை நிலையங்கள், வர்த்தக நிறுவனங்கள் முதலியனவற்றிலே சிறப்பாகப் பணியாற்றி வந்துள்ளனர். திரு.என்.ஏ.வைத்திலிங்கம் இவ்விடத்தைச் சேர்ந்த காலத்தால் முற்பட்ட விஞ்ஞானப் பட்டதாரியாவார். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலே பயின்று லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானக் கலைமாணி (B.Sc.)ப் பட்டம் பெற்றுப் பின்னர் இங்கிலாந்து சென்று பொறியியலில் மேற்படிப்பினை வெற்றிகரமாக முடித்தவர். இலங்கையின் பல இடங்களிலும் அரும்பணியாற்றி, புகையிரதச்சேவைப் பிரதம பொறியியலாளராக விளங்கியவர். அநுராதபுரம், யாழ்ப்பாணம் புகையிரதநிலையங்கள் அவரின் தொழில்நுட்பத்திறனையும் கைவண்ணத்தையும் இன்றும் சுட்டிக்காட்டுவன. இவர் புங்குடுதீவுக்குப் பல சமூக சேவைகள் செய்துள்ளார். இவர் முன்னர் குறிப்பிட்டவை பசுபதிப்பிள்ளையின் மருகர். ஓய்வுபெற்றபின் வெளிநாடுகளிலும் பணி செய்தவர். திரு.க.மகாலிங்கம் ஆரம்பகால கலைப்பட்டதாரியாவார். இவர் பல இடங்களில் சிறப்பாக ஆசிரியசேவை செய்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது புவியியற் பேராசிரியரான அமரர் சோ. செல்வநாயகம் ஒரு பிரபல புவியியலாளரும் தமிழறிஞருமாவார். இவர் இவ்வூரைச் சேர்ந் தவரே. மேலும் பேராசிரியர் தயாளன் அம் பலவாணர் (அறுவைச் சிகிச்சை), பேராசிரி யர் கா.குகபாலன் (புவியியல்), பேராசிரியர் வி.சிவசாமி (சமஸ்கிருதம்), சட்ட முதுநிலை விரிவுரையாளர்) த.தமிழ்மாறன், பொருளியல் முன்னாள் விரிவுரையாளர் ந.பேரின்பநாதன் முதலியோரும் இவ்விடத்தைச் சேர்ந்தவர் களே. இவர்களைவிட விஞ்ஞானம், பொறி யியல், நூலகவியல் முதலிய பிற அறிவி யல் விரிவுரையாளர் சிலர் உள்ளனர். பல் கலைக் கழகத்துக்கு வெளியிலும் இவ் விடத்தைச் சேர்ந்த கணிசமான தொகை பொறியியலாளர்கள், (மேலைத்தேய, சுதேச) வைத்தியர்கள், கலை, விஞ்ஞான, விவசாயப் பட்டதாரிகளும் கணக்காளரும் உள்ளனர்.

முன்னாள் வடமாநிலக் கல்விப்பணிப் பாளரும், சமயவித்தகியுமாகிய திருமதி ரத்தினா நவரத்தினம், அவருடைய கணவர் நவரத்தினம் ஆகியோர் இவ்வூரைச் சேர்ந்த வர்களே. திருமதி நவரத்தினம் ஆங்கிலம், தமிழ், கல்வியியல், சைவசமயம், சைவசித் தாந்தம் ஆகியவற்றிலே சிறந்த தேர்ச்சி பெற்றவர். யோகர் சுவாமிகளின் பிரபலசிஷ்யை. பல நூல்கள் எழுதியவர். பிரபல நூலகர் கலாநிதி பாக்கியநாதனும், அவருடைய பாரியாரும் இவ்வூரைச் சேர்ந்தவர்கள்.

கல்விச் சேவையிலும், நிர்வாக சேவை யிலும் சிலர் குறிப்பாகப் பணிசெய்துள்ளனர். செய்து வருகின்றனர். நிர்வாக சேவையிலே பிரபல நிர்வாகி நாராயணசுவாமி, திட்டமிடல் நிபுணர் தி.திரிலிங்கநாதன், தற்போதைய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.சண் முகநாதன், வடகிழக்கு மாகாண அமைச் சிலே பணியாற்றும் இளங்கோ முதலியோரை குறிப்பிடலாம். கல்விச் சேவையில் ஏற்கனவே குறிப்பிட்ட திருமதி இ.நவரத்தினத்தைவிட யாழ்ப்பாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் த.துரைசிங்கம், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சிலே உதவிச் செயலாளராகப் பணியாற்றிய எஸ்.சடாட்சர சண்முகதாஸ் தற்போதைய அதிகாரிகளான க.புலேந்திரன், எஸ்.மகாலிங்கம், யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த மு.சிவபாதம் முதலியோரைக் குறிப் பிடலாம். முன்னாள் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரும் தற்போது வடகிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருமான பொ.பாலசிங்கம் இவ்விடத்தைச் சேர்ந்தவரே. கூட்டுறவு முன்னாள் உதவி ஆணையாளர் யோ.சின்னராஜாவும் இவ்விடத்தைச் சேர்ந்த வரே.

குறிப்பிடத்தக்க சில தமிழ் அறிஞர்கள் இவ்விடத்தைச் சேர்ந்தவர்கள். தனித்தமிழ் இயக்கத் தலைவரும் சிறந்த தமிழ், சைவ, ஆங்கில அறிஞரும், ஆய்வாளரும், எழுத்தா ளருமான மறைமலை அடிகளின் தாயார் இவ்வூரைச் சேர்ந்தவர் என்ற ஐதீகமுண்டு. இது நன்கு ஆராயப்படவேண்டியதாகும். இலங்கைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் வி.செல்வநாயகம் இவ் வூரைச் சேர்ந்தவர். இவருடைய மூத்த சகோ தரரின் மகனாகிய எஸ்.சிவஞானசுந்தரம் (நந்தி) சமூகமருத்துவப் பேராசிரியரும் பிர பல எழுத்தாளருமாவார்.

தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேச் சாளர்களில் சிலர் பற்றி ஏற்கனவே குறிப் பிடப்பட்டது. க.சிவராமலிங்கம் அவரது சகோ தரர் ஈழத்துச் சிவானந்தன், த.திருநாவுக்கரசு (நாவேந்தன்) ஆகியோர் சிறந்த தமிழ்ப் பேச்சாளர்களும் எழுத்தாளர்களுமாவர். முன் னையவர் ஆங்கிலத்திலும், சைவத்திலும், தமிழிலும் சிறந்த புலமை உடையவர், சிவா னந்தன் சில நூல்களை எழுதியதோடு “ஆலயமணி” சஞ்சிகையையும் சிறிதுகாலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரித்தவர். நாவேந்தன் பல நூல்களை எழுதியுள்ளார். இவருடைய சகோதரர் த.துரை சிங்கம் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர் மட்டுமன்றி கவிஞரும். குறிப்பாகக் குழந் தைக் கவிஞராவார். மு.தளையசிங்கம், மு. பொன்னம்பலம் சகோதரர்கள் குறிப்பிடத் தக்க எழுத்தாளர்களும், பேச்சாளர்களுமாவர். இருவரும் இலங்கைப் பல்கலைக்கழகத் திலே கலைமாணிப் பட்டப்பயிற்சி பெற்ற வர்கள். இவர்கள் இருவரும் பல நூல்களை யும் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர்; கவிதைகளும் இயற்றியுள்ளனர்; இலக்கியத் திலே முற்போக்கு வாதத்தைத் தீவிரமாக எதிர்த்தவர்கள். ஆக்க இலக்கியத்துடன் திறனாய்வு, சமய சமரசம் முதலியனவற்றை யும் ஆதரித்துள்ளனர். இவர்களுடைய மாணவரான சு.வில்வரத்தினம் ஒரு சிறந்த கவிஞராவர்.

1954ம் ஆண்டு இங்குள்ள கண்ணகி அம்மன் ஆலயமுன்றலிலே சிலப்பதிகார விழா சுமார் ஒருகிழமைக்கு கோலாகலமாக நன்கு நடைபெற்றது. அதற்கு இலங்கையி லுள்ள தமிழ் அறிஞர் பலர் மட்டுமன்றித் தமிழகத்திலிருந்து சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம், பேராசிரியர் ஆ.முத்துசிவன், பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் முதலியோ ரும் பங்குபற்றிச் சிறப்பித்தனர். சென்ற நூற் றாண்டின் பிற்பகுதியில் இங்கு தேம்பாவணி விழா நடைபெற்றது. புகழ்பெற்ற இசைக் கலைஞர் சீகாழி கோவிந்தராஜனின் இசைக் கச்சேரி கிராஞ்சியம்பதி சிவன் கோவிலில் நடைபெற்றது.

வடஇலங்கைச் சர்வோதயத்தை உருவாக்கி அதனை இங்கு சிறப்பாக நடத்திவரும் க.திருநாவுக்கரசு இவ்விடத்திற்குப் பல ஆண்டுகளாகப் பலதிறப்பட்ட சமூகசேவை களை ஆற்றி வருகிறார். அவர் சிறந்த பேச்சாளருமாவார். "தீவகம்" எனும் சஞ்சி கையைச் சிலகாலம் நடத்தியவர். அதிபர் கு.வி.செல்லத்துரை தமிழ்ப் பேச்சாளரும் எழுத்தாளருமாவார். இலங்கைத் தமிழாசிரி யர் சங்கத்தின் தலைவராகவும் விளங்கிய வர். இவரது சகோதரர் கு.தம்பித்துரை ஆசிரியர் யாழ்ப்பாணத்திலே "கலைவாணி" அச்சகத்தையும் புத்தகசாலையையும் நிறுவி நடத்திவந்தவர். உள்ளூரிலே விவசாயம், கடற்றொழில் முதலியன செய்வோரைவிட ஏனையோரிற் பலர் வர்த்தகர்களாகவும், ஆசிரியர்களாக - குறிப்பாகத் தமிழ் ஆசிரியர் களாகவும், யாழ்ப்பாணத்திலும், கொழும் பிலும், பிற இடங்களிலும் விளங்கி வந்துள் ளனர். குறிப்பிட்ட இடங்களிலே வர்த்தகம் செய்து பிரபல்யமுற்றோர் அவ்வவ்விடப் பெயர்களோடு சேர்த்தும் அழைக்கப்பட்டனர். எடுத்துக்காட்டுக்காக பொறளை நாகலிங் கம், பதுளை வைத்திலிங்கம், டிக்கோயா நாகலிங்கம், தரணியக்கவ தம்பு, நுவரெலியா கார்த்திகேசு யக்குவைல கந்தையா முதலி யோரைக் குறிப்பிடலாம். புங்குடுதீவின் பொருளாதார வளத்திற்கும், தமிழ், சமயப் பணிகளுக்கும் வர்த்தகப் பெருமக்களின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கவை. அம் பலவாணர் சகோதரர்கள் (பெரியவாணர் க.அம்பலவாணர், சின்னவாணர் சி.அம்பல வாணர்) இவ்விடத்திற்குக் குறிப்பிடத்தக்க சமூக சேவை செய்துள்ளார்கள். அவர்க ளின் பெயரால் அழைக்கப்படும். வாணர் தாம்போதியை (வேலணையையும் புங்குடு தீவையும் இணைப்பது) அமைப்பதில் முன்னின்று இவர்கள் செயற்பட்டவர்கள். இவர்களின் முயற்சிகளுக்கு கொழும்பிலுள்ள புங்குடுதீவு நலன்புரிச் சங்கமும் பக்கபல மாக நின்றுள்ளது. இதிலே என்.ஏ.வைத்தி லிங்கமும், சில வர்த்தகப் பெருமக்களும், பிறரும் நன்கு செயற்பட்டனர். அக்காலத்திய ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.தம்பிஐயாவும் இம் முயற்சிக்கு தக்க ஆதரவு அளித்தார். வைத்திலிங்க உடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார், சரவணமுத்து உடையார், வழக்கறிஞர் ப.கதிரவேலு, மா.முருகேசு உடையார், ச.இரா சேந்திரம் விதானையார், சின்னத்துரை விதா னையார் முதலியோரைக் குறிப்பிடலாம்.

இங்கு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றுள்ளது. இது தென்னிந்திய திருச்சபைக்குரியது. 19ம் நூற்றாண்டிலே அமைக்கப்பட்டது. இச்சமயத்தவர் தொகை மிகக் குறைவாக இருந்தாலும், இவ்வூர்க் கல்வி வளர்ச்சிக்கும் சமூக நலனுக்கும் இவர்கள் கணிசமான பங்களிப்புக்கள் செய் துள்ளனர். இவ்விடத்தைச் சேர்ந்த சில கிறிஸ்தவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் சிறப் பாக உள்ளனர். எடுத்துக் காட்டுகளாக அமரசிங்கம் ஆசிரியரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆசிரியத் தொழில், மருத்து வம், அரசியல் முதலியனவற்றிலும் சிறப் புற்றனர். அவரின் ஒரு மகன் செல்லையா அமரசிங்கம் நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபராக மட்டுமன்றி இலங்கை சட்டசபை உறுப்பினராகவும் விளங்கியவர். அவருடைய மகள் ஒருவர் உடுவில் மகளிர் கல்லூரி அதிபராகவும் விளங்கியவர். இவரின் மகன் உளநோய்ப் பேராசிரியராக விளங்குகிறார். செல்லையாவின் சகோதரர் சிலர் மருத்துவசேவையிலே பிரபல்யமுற்ற னர். அருட்திரு.அம்பலவாணரின் மூத்த மகன் அருட்திரு. டி.ஆர்.அம்பலவாணர் சிறந்த தமிழறிஞரும், பேச்சாளருமாவார். அவரின் சகோதரரான டி.ஜே.அம்பலவாணர் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராகவிளங்கினார். இவரின் பாரியார் மகப்பேற்றியல் வைத்திய நிபுணர், மகன் தயாளன் அறுவைச் சிகிச்சைப் பேரா சிரியர். இவரின் ஏனைய இரு சகோதரர்களும் சகோதரியும் கல்விச் சேவையிலே பணிபுரி கின்றனர். மா.இராமநாதன், பொன்னையா குடும்பத்தினர் குறிப்பாகக் கல்விச் சேவை யிலே பணியாற்றி வந்துள்ளனர். யோகுப் பிள்ளை குடும்பத்தினர் குறிப்பாகக் கல்விச் சேவையிலும் கூட்டுறவுச் சேவையிலும் நற் பணியாற்றி வந்துள்ளனர். புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தற் போதைய முகாமையாளர் இக்குடும்பத்தைச் சேர்ந்தவரே. மேலும் அங்கிலிக்கன் திருச் சபையைச்சேர்ந்த சில பிரமுகர்கள் இவ் வூரைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது.

கத்தோலிக்க சமயத்தவர் தொகை குறைவாக இருந்தாலும் அவர்களும் சில பணிகள் செய்துள்ளனர். அவர்களுடைய இரு ஆலயங்கள் (அர்ச் சவேரியார், அர்ச் அந்தோனியார்) உள்ளன. "நான்" எனும் சஞ்சிகை ஆசிரியர் இவ்விடத்தைச் சேர்ந்த வரே. திரு.நடராசா, பூராசா ஆசிரியர்களும் அவர்களுடைய சகோதரியான அருட் சகோ தரி விக்ரறின் ஆசிரியையும் கல்விச் சேவை யிலே நற்பணி ஆற்றிவந்துள்ளனர்.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் கால தேவா லயங்கள் எவையேனும் இப்பொழுது இல்லை. ஆனால் கி.பி.17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்திலே பணியாற்றிய ஒல்லாந்த மதகுருவான போல்டேயசின் கூற்றுப்படி இங்கு ஒரு தேவாலயம் இருந்தது. அதில் 800 மக்கள் வழிபட்டனர். ஆனால் இது எங்கி ருந்ததென்பது தெரியாது. இங்குள்ள வெள் ளைப்பாலன் கோயில் எனுமிடத்திலே போத் துக்கீச அல்லது ஒல்லாந்த தேவாலயம் இருந்திருக்கலாம்.

இங்கிருந்த பழையகட்டடங்கள் கோயில் களோ, பிற கட்டிடங்களோ எஞ்சியிராமை யாலே இங்கு நிலவிவந்த கட்டடக்கலை, சிற்பம், ஓவியம் பற்றிக் கூறமுடியாதுள்ளது. எனினும் சமகாலத்திலே ஓவியக் கலைஞர் சிலர் இங்கு வாழ்ந்துவந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஓர் இசைப்பாரம்பரியம் நிலவி வந்துள்ளது. சைவத் திருமுறைகள் குறிப்பாக தேவாரம் போன்றவற்றைப் பண்ணுடன் பாடக்கூடிய அறிஞர் 19ஆம் நூற்றாண்டு தொடக்கமாவது வாழ்ந்து வந்துள்ளனர். ஆறுமுகநாவலர் ஏற்படுத்திய சைவசமய மறுமலர்ச்சியைத் தொடர்ந்து கந்தபுராணப் படனம், பண்ணிசை முதலியன புதிய உத்வேகம் பெற்றன. நாவலரின் சமய மரபிலே தோய்ந்த க.வினாசித்தம்பி, நா.தில்லையம்பலம் போன்ற ஆசிரியர்கள் இசையிலே மிகத்திறமை காட்டினர். நா.தில்லையம்பலம் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர். இவர் கர்நாடக இசையையும் அறிந்திருந்தார். 20ம் நூற்றாண்டு முற்பகுதியிலும் பின்னரும் தமிழகத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்ற நிறுவனங்களிலே கர்நாடக இசை, பண்ணிசை ஆகியனவற்றைச் சிலர் வரன்முறைப்படி கற்றுத்திரும்பினர். இவ்வகையில் சங்கீதபூஷணம் தாமோதரம்பிள்ளை, பொன்.சுந்தரலிங்கம், பொன்.சுபாஸ்சந்திரன், கா.பரமேஸ்வரன் முதலிய வாய்ப்பாட்டிசைக் கலைஞரும் நடராஜா போன்ற வயலின் கலைஞரும், கனகசுந்தரம் போன்ற வீணைக் கலைஞரும் திருப்பூங்கொடி ஆறுமுகம் போன்ற வில்லுப்பாட்டிசைக் கலைஞரும் குறிப்பிடற்பாலர். பொன்.சுந்தரலிங்கமும் அவரின் நண்பர்கள், வர்த்தகர்கள் சிலரும் ஒன்று சேர்ந்து 'வாணர் அரங்கு' எனும் அரங்கினை இங்கு அமைத்துள்ளனர். பொன் சுந்தரலிங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள இளங் கலைஞர் மன்றத்தினை உருவாக்கியவர். சி.இரத்தினசபாபதி பிரபல பண்ணிசைக் கலைஞர். பிரபல மெல்லிசைக் கலைஞர் சாந்தனும் இவ்வூரைச் சேர்ந்தவரே. கர்நாடக இசையினை யாழ்ப்பாணத்திலே பிரபல்யமாக்கியவர்களிலே ஒருவரான புத்துவாட்டி சின்னத்தம்பியின் மனைவி பொன்னுவும் (இவர்களுடைய மகன் நாகலிங்கத்தின் மகனே பிரபல இசைக்கலைஞர் புத்துவாட்டி சோமசுந்தரம்), புகழ்பெற்ற நாதஸ்வர, தவில் கலைஞர்கள் என்.ஆர்.கோவிந்தசாமி, என். ஆர்.சின்னராசா முதலியோரின் தாயாரும் இவ்வூரைச் சேர்ந்தவர்களே.

இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நோக்கும் போது நீண்டகாலமாகச் சமய ஞானமும், தமிழ்ப்பண்பாடும் நன்கு நிலவி வந்துள்ள ஓர் இடமாக இது மிளிர்ந்து வந்துள்ளமை தெளிவாகும்.

*

**"கவிதை என்ற சொல் பொருளுடைய சொல். அதில் இருந்து எந்தவோர் எழுத்தை எடுத்துவிட்டாலும் பொருள் கொடுக்கும் சொல். 'க' என்ற எழுத்தை எடுத்தால் 'விதை' கிடைக்கும். 'வி' யை எடுத்து விட்டால் 'கதை' கிடைக்கும். 'தை' எழுத்தை எடுத்து விட்டால் "கவி" கிடைப்பான்.**

**தகவல் - Dr.கலைஞர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவு எல்லைப்பரப்பில்
பணியாற்றுபவர்கள்



UNHCR நிறுவனத்தின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்ட சங்கத்தின் 'செந்தாரகை' படகில் சங்கத்தின் உபதலைவர் எஸ்.கே.சண்முகலிங்கமும் UNHCR யாழ். வதிவிடப் பிரதிநிதியும் காணப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இ. சுப்பிரமணியம் B.A.**
**இளைப்பாறிய அதிபர்**
**கூட்டுறவு அபிவிருத்தி நிலையம்.**

# கூட்டுறவு நிறுவனங்கள் அரசசார்பற்ற நிறுவனங்களாகும்

**பொது**ப் பொருளாதாரத் தேவையுள்ள மக்கள் தாமாக விரும்பித் தம்மோடு ஒத்த பலருடன் சமத்துவத்துடனும், சுதந்திரத்துடனும் மனிதர்கள் என்ற முறையில் ஒன்றிணைந்து கூட்டுறவுக்கொள்கைகளுக்கும், பண்புகளுக்கும் அமைய தமது பொருளாதார சமூக, கலாசார நலன்களையும், தேவைகளையும் இலகுவில் நிவிர்த்தி செய்வதற்காக நிறுவியுள்ள ஒரு மக்கள் நிறுவனமே கூட்டுறவு நிறுவனமாகும்.

இங்கிலாந்து ஜேர்மனி, சுவீடன், டென்மார்க், இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளில் அரசாங்கத்தினதோ வேறு எவரினதோ தலையீடும் வற்புறுத்தலும் இன்றி மக்கள் தமது சொந்த விருப்பத்தின்படி கூட்டுறவு நிறுவனங்களை அமைத்தனர். இங்கிலாந்திலும் ஜேர்மனியிலும் முதன் முதலாக றொபேட் ஒவன், டாக்டர் வில்லியம் கிங், வன்சிஸ்ராட் நீஸ்றபேசன், சூழ்ஸ் டெவிக்ஸ் போன்ற உலக புகழ்பெற்ற கூட்டுறவாளர்களினால் 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் கூட்டுறவு நிறுவனங்களை நிறுவுவதினால் ஏற்படும் அனுகூலங்கள் பற்றிய பிரசாரத்தால் தூண்டப்பட்டு, மக்கள் தாமாக விரும்பிக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவினர். இன்றுகூட இந்நாடுகளில் மக்கள் வேறு எவரின் வற்புறுத்தலோ தூண்டுதலோ இன்றித் தாமாக விரும்பியே கூட்டுறவு நிறுவனங்களை நிறுவுகின்றனர். ஆதலால் கூட்டுறவு நிறுவனங்கள் அரசசார்பற்ற பூரண மக்கள் நிறுவனங்களாகும்.

கூட்டுறவு நிறுவனங்களின் முக்கிய நோக்கம் இலாபநோக்கமின்றிச் சேவை நோக்கத்துடன் மக்களுக்கு பொருளாதார, சமூக, கலாசாரச் சேவைகளைப் புரிவதும் மக்கள் முதலாளித்துவச் சுரண்டலிலிருந்து பாதுகாப்பதுமாகும். உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் முதலாளித்துவச் சுரண்டலும் தாக்கமும் அதிகரித்தபோது மக்களைப் பாதுகாக்கவே கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

இங்கிலாந்து, ஜேர்மனி, யப்பான், இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் அனைத்திலும் கறுப்புச்சந்தை, பதுக்கல், அநியாய விலையில் விற்றல், தரமற்றபொருள் விநியோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவு நிறை குறைத்து விற்றல், தரகர் கொடுமை போன்ற முதலாளித்துவச் சுரண்டல்கள் ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் தான் நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் அமைக்கப்பட்டன.

மேலும் ஜேர்மனி, யப்பான், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வட்டிக் கொடுமை, அநியாய வட்டி, கடன் சுமை போன்ற முதலாளித்துவச் சுரண்டல்கள் பன்மடங்காக அதிகரிக்கப்பட்டபோதே கடன் கொடுக்கும் கூட்டுறவு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. ஆதலால் கூட்டுறவு நிறுவனங்கள் அரசசார்பற்ற பூரண மக்கள் நிறுவனங்களாகும்.

கூட்டுறவு நிறுவனங்கள் மக்களுக்கு மட்டற்ற சேவைகளைப் புரிந்து வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்கள், அங்கத்தவர்களின் வீட்டுக்கும், தொழிலுக்கும் தேவையான பொருட்கள் யாவற்றையும் நியாய விலையில் தரமானதாக சரியான அளவு நிறையில் வளங்கிவருகின்றன. அங்கத்தவர்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்து விநியோகித்தும் வருகின்றன. அங்கத்தவர்களுக்குத் தேவையான கடன்களையும் முற்பணங்களையும் நியாயவட்டியில் தேவைக்கு ஏற்ப வளங்கிவருகின்றன. அங்கத்தவர்களின் தொழிலுக்கு வேண்டிய தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதுடன் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தும் வசதிகளையும் செய்து கொடுக்கின்றன. அங்கத்தவர்களுக்குத் தேவையான வங்கிச்சேவை வசதி, போக்குவரத்து வசதி, வேலைவாய்ப்பு வசதி, வைத்திய சுகாதாரவசதி, கொண்டாட்டங்களுக்கான கதிரை, பந்தல் வசதி, கூட்டுறவுப் பண்ணைகள் மூலம் விவசாயம், கோழிவளர்ப்பு, மந்தை வளர்ப்புப் போன்ற வசதிகளை வளங்கல், சிக்கன சேமிப்பு வசதிகளை வளங்கல் கல்விகலாசார வசதிகளை வழங்கல், சமூகமுன்னேற்றத்தையும் சமூக ஒற்றுமையையும் செயற்படுத்துதல் மக்கள் மத்தியில் சனநாயக உரிமைகளையும் மரபுகளையும் அபிவிருத்தி செய்தல் போன்ற பல்வேறுபட்ட புனிதமான சேவைகளைச் சிறப்பாகப்புரிந்து வருகின்றன. ஆதலால் கூட்டுறவு நிறுவனங்கள் புனிதமான மக்கள் நிறுவனங்களாகும்.

மேலும் இச் சேவைகள்மூலம் கூட்டுறவு நிறுவனங்கள் சமுதாயத்தில் இரத்தம் சிந்தாத அமைதியான அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரப் புரட்சியை ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதாரச் செழிப்பும், அமைதியும், பாதுகாப்பும், ஒழுக்கமும் நிறைந்த அறம் சார்ந்த சாத்வீக ரீதியான ஒரு நவீன கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்க முயன்று வருகின்றன. ஆதலால் கூட்டுறவு நிறுவனம் ஒரு மக்கள் நிறுவனம் மட்டுமல்ல ஒரு சிறந்த **"மக்கள் வாழ்க்கை முறை"** யுமாகும்.

இங்கிலாந்து, ஜேர்மனி, டென்மார்க், இத்தாலி, கனடா போன்ற மேற்கு நாடுகளில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கோ, எல்லையற்ற சட்டக் கட்டுப்பாட்டுக்கோ, அரசாங்க உத்தியோகத்தினரின் கட்டுப்பாட்டுக்கோ அரசியல் வாதிகளின் தலையீட்டுக்கோ உட்படாமல் பூரண சுதந்திரத்துடனும் இறைமையுடனும் தன்னாதிக்கத்துடனும் இயங்கிவருவதால் கூட்டுறவு நிறுவனங்கள் பூரண மக்கள் நிறுவனங்களாகும்.

கூட்டுறவு நிறுவனங்கள் யாவும் ஜனநாயக மரபுகளுக்கும் பாரம்பரியங்களுக்கும் அமைய அவற்றின் அங்கத்தவர்களினால் ஜனநாயக முறைப்படியே நிர்வகிக்கப்படுகின்றன. எமது நாட்டை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியும், பாராளுமன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும், ஜனநாயகமுறையில் நிர்வகிப்பது போன்று கூட்டுறவு நிறுவனங்களும் அங்கத் தவர்களாலோ அல்லது அவர்களின் பிரதி நிதிகளாலோ தெரிவு செய்யப்பட்ட தலை வரினாலும், நெறியாளர் குழுவினாலும் ஜன நாயகமுறையில் நிர்வகிக்கப்படுவதால் கூட் டுறவுச் சங்கங்கள் பூரண மக்கள் நிறுவனங் களாகும்.

கூட்டுறவு நிறுவனங்களை நிர்வகிக்கப் பயன்படுத்தப்படும் உப விதிகள், நடை முறைவிதிகள், கொள்கைகள் போன்றவற்றை கூட்டுறவு நிறுவனங்களின் அங்கத்தவர் அடங்கிய பொதுச் சபையிலும் நெறியாளர் குழுவிலும் உருவாக்கப்படுவதால் கூட்டுற வுச்சங்கங்கள் பூரண மக்கள் நிறுவனங் களாகும்.

கூட்டுறவுச் சங்கங்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள் யாவும் ஜனநாயக முறைப்படி கலந்துரையாடிச் சகிப்புத்தன்மையுடன் விட்டுக் கொடுத்து இணக்கமான முறையில் சமா தானமாக அறம்சார்ந்த சாத்வீக வழியில் மேற்கொள்ளப்படுவதால் கூட்டுறவுச் சங்கங் கள் பூரண மக்கள் நிறுவனங்களாகும்.

கூட்டுறவு நிறுவனங்களில் அங்கத்துவம் வகிக்கும் சகல அங்கத்தவர்களுக்கும் ஒரு ஜனநாயக நாட்டுப் பிரசைக்குள்ள சகல அரசியல், பொருளாதார, சமூக சிவில் உரி மைகள் யாவும் கூட்டுறவு நிறுவனத்தைப் பொறுத்தவரை பூரணமாக வளங்கப்பட்டுள் ளது. அனைத்து அங்கத்தவர்க்கும் ஒருவ ருக்கு ஒரு வாக்குரிமை வழங்கப்பட்டு அர சியல் சமத்துவம் பேணப்பட்டுள்ளது. அனைத்து அங்கத்தவர்களும் சாதி, மத, இன, பிரதேச வேறுபாடுகள் இன்றிச் சம மானவர்களாக, உயர்ந்த மனிதர்களாக கரு தப்படுகின்றனர். சமத்துவம், சுதந்திரம், சகோ தரத்துவம், அந்நியோன்னியம், மனிதத்துவம், தலைமைத்துவ உரிமை, பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கண்டனம் செய்யும் சுதந்திரம் என்பன பூரணமாக வளங்கப் பட்டுள்ளன. ஆதலால் கூட்டுறவு நிறுவனங் கள் பூரண மக்கள் நிறுவனங்கள் ஆகும்.

கூட்டுறவு நிறுவனங்கள் உலக மக் களை கூட்டுறவு அமைப்பு மூலம் ஒரு உலக கூட்டுறவுச் சமுதாயமாக இணைத்து போட்டி, பகை, போர், அச்சுறுத்தல், சுரண்டல் முற்றாக ஒழிக்கப்பட்ட-பாதுகாப்பும் அமைதி யும் செழிப்பும் நிறைந்த - ஒரு உலக கூட்டுற வுச் சமுதாயத்தை உருவாக்கமுயல்கின்ற கிராம ரீதியில் மக்களை ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுபடுத்தும் ஆரம்ப கூட்டுற வுச் சங்கங்கள் பிரதேச ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும், மாகாண ரீதியாகவும் தேசிய ரீதி யாகவும் சமாசங்களாகவும் கூட்டுறவுச் சபை களாகவும் சம்மேளனங்களாகவும் இணைந்து தேசியரீதியான கூட்டுறவு அமைப்பை நிறுவி, உலகிலுள்ள தேசியரீதியான கூட்டுறவு அமைப்புக்கள் யாவும் ஒருங்கிணைந்து சர்வ தேச ரீதியான அகில உலக கூட்டுறவுச் சம்மேளனத்தை நிறுவி உலக மக்களை கூட்டுறவு அமைப்பாக ஒன்றுபடுத்தியுள்ள தால் கூட்டுறவு நிறுவனங்கள் பூரண மக்கள் நிறுவனங்களாகும்.

மேற்படி அகில உலக கூட்டுறவுச் சம் மேளனம் 1995ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தி யுள்ள தன்விருப்பார்ந்த தடையற்ற அங்கத் துவம், ஜனநாயகநிர்வாகம், அங்கத்தவர் களின் பொருளாதாரப் பங்களிப்பு சுதந்திர மாகவும் சுயமாகவும் செயற்படுதல், கல்வி, பயிற்சியளிப்பு, தகவல்திட்டம், கூட்டுறவில் கூட்டுறவு, சமூகமேம்பாடு என்ற ஏழு கூட்டுற வுக்கொள்கைகளும் சுய உதவி, பரஸ்பர உதவி, சிக்கனம், சேமிப்பு போன்ற கூட்டுற வுப் பண்புகளும் மனிதத்துவத்தையும், மனித உரிமையையும், மனித மேம்பாட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் அடிப்படையாகக் கொண்டு உருவாக் கப்பட்டவையாகும். ஆதலால் கூட்டுறவு நிறு வனங்கள் பூரண மக்கள் நிறுவனங்களா கும்.

இலங்கை, இந்தியா போன்ற குறை விருத்தி நாடுகளிலும்; ருஷியா, சீனாபோன்ற பொதுவுடமை நாடுகளிலும் நிறுவப்பட்டுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் பூரண மக்கள் நிறுவனங்கள் அல்ல என்று பல அறிஞர்க ளால் விமர்சிக்கப்பட்டுள்ளது. இவ்விமர்சனங் களை நன்கு பரிசீலனை செய்து, இந் நாடுகளிலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் யாவும் பூரண மக்கள் நிறுவனங்கள் என் பதை நிறுவவேண்டியதும் கூட்டுறவாளர்கள் என்ற முறையில் எமது தலையாய கடமை யாகும்.

இலங்கை, இந்தியா ருஷியா, சீனா போன்ற நாடுகளில் இங்கிலாந்து, ஜேர்மனியைப் போன்று மக்கள் தாமாகவிரும்பிக் கூட்டுறவு நிறுவனங்களை நிறுவாமல் அந்நாடுகளின் அரசாங்கங்களால் கூட்டுறவுச் சட்டங்களை உருவாக்க அரசாங்கத்தால் கூட்டுறவு நிறு வனங்கள் உருவாக்கப்பட்டமையால் இந் நிறுவனங்களைப் பூரண மக்கள் நிறுவனங் களாகக் கொள்ளமுடியாதென்று விமர்சிக்கப் படுகின்றது. இவ்விமர்சனத்தை நியாயமற்ற தாக்க வேண்டியது எமது தலையாய கட மையாகும்.

இந்நாடுகளிலுள்ள மக்கள் இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் உள்ள மக் களைப் போன்று தாமாக விரும்பிக் கூட்டு றவு நிறுவனங்களை உருவாக்கும் நிலை யில் இருக்கவில்லை. இந்நாடுகளில் உள்ள பாமர மக்கள் கூட்டுறவு நிறுவனங்களை நிறுவுவதால் ஏற்படும் அனுகூலங்களை நன் குணர்ந்து கூட்டுறவு நிறுவனங்களை நிறு வக்கூடிய பக்குவ நிலையில் இருக்கவில்லை. ஆதலால் இந்நாடுகளில் அரசாங்கங்களே முன்வந்து கூட்டுறவுச் சட்டங்களை இயற்றி சட்டப்படி கூட்டுறவு நிறுவனங்களை நிறுவ அவற்றில் அங்கத்தவர்களைக் கட்டாயப் படுத்திச் சட்டப்படி சேர்த்துக் கொண்டது உண்மையே.

கடும் நோயினால் பாதிக்கப்பட்டு மரணப் படுக்கையில் இருக்கும் சிறு குழந்தை ஒன்று அருமருந்தை அருந்துவதுதான் தன் னைக் குணப்படுத்துவதற்கு சிறந்த மார்க் கம் என்பதை தனது அறியாமையால் உண ராமல் அருமருந்தைக் குடிக்கத்தவறும்போது குழந்தையின் நலனில் அக்கறை கொண்ட தாயானவள் குழந்தைக்கு அரு மருந்தை வலோக்காரமாகப் பருக்குவதுபோன்று வறுமை ஏற்றத்தாழ்வு சுரண்டல் போன்ற நோய்க ளால் பாதிக்கப்பட்டு அவதிபட்டுக் கொண்டி ருந்த மக்களின் நலனில் அக்கறைகொண்ட அவர்களின் அரசாங்கம் கூட்டுறவு நிறுவனங் களை நிறுவி அவர்களைக் கட்டாயப்படுத் திக் கூட்டுறவு நிறுவனங்களில் சேர்த்துக் கொண்டதில் என்ன தவறுண்டு. யார் உரு வாக்குவதென்பதில் பிரச்சினையில்லை. அர சாங்கமும் மக்களால் உருவாக்கப்பட்ட மக் கள் அமைப்புத்தானே. ஆதலால் அரசாங்கம் கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்கினா லென்ன மக்கள் உருவாக்கினாலென்ன கூட் டுறவு அமைப்புக்கள் பூரண மக்கள் நிறு வனங்களே.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளி லுள்ள கூட்டுறவு நிறுவனங்களை அரசாங் கம் கட்டுப்படுத்துவதாலும், எல்லையற்ற அரசியல் தலையீடுகள் இருப்பதாலும் இந் நாடுகளின் கூட்டுறவு நிறுவனங்களைப் பூரண மக்கள் நிறுவனங்களாக ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் விமர்சிக்கப்படுகின்றது. இவ்விமர்சனத்தையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இங்கிலாந்து, ஜேர்மனி, சுவீடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா போன்ற நாடுகளிலுள்ள சூழ்நிலை வேறு. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலுள்ள சூழ்நிலை வேறு. ஐரோப்பிய நாட்டுக் கூட்டுறவு நிறுவனங்கள் அரசாங்கத்தின் உதவு தொகைகளையும் நன்கொடைகளையும் கடன்களையும் எதிர்பார்க்காமல் முழுமையாக சொந்த முதலில் இயங்கிவருவதால் அரசாங்கத்தின் தலையீட்டுக்கு உட்படாமல் பூரண சுதந்திரமுள்ள மக்கள் நிறுவனங்களாக இயங்கி வருகின்றன. ஆனால் குறைவிருத்தி நாடுகளிலும் பொதுவுடமை நாடுகளிலுமுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் அரசாங்கத்திடம் பெருமளவு கடன்களையும் உதவு தொகைகளையும் பெற்றுக் கடன் முதலில் இயங்குவதால் அரசாங்கம் தான் கொடுத்த கடனும் உதவு தொகைகளும் சிறந்த முறையில் மக்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக கூட்டுறவு நிறுவனங்களை மேற்பார்வை செய்யவும், கட்டுப்படுத்தவும் அரசு முயன்றுவருகின்றது. இதில் என்ன தவறுண்டு. எமக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து தந்து விட்டு எமது செயற்பாட்டில் தலையிடாமல் வெளியில் நில் என்று கூட்டுறவு நிறுவனங்கள் அரசாங்கத்தைக் கேட்கலாமா? இவ்விதம் கேட்பது நீதியாகுமா? ஜனநாயக ரீதியான சாத்வீகரீதியான கோரிக்கையாகுமா?

கூட்டுறவு நிறுவனங்கள் அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கும்வரை அரசாங்கத்தின் கட்டுப்பாடும் தலையீடும் இருந்தே வரும். இதுவே இன்றைய நிலையில் யதார்த்தமானதாகும். இதனைத் தவிர்க்க முடியாது. ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் தமது தொழிற்பாடுகளை பன்முகப்படுத்தி இலாபத்தை உழைத்து சொந்த முதலை திரட்டி கடன் முதலை முற்றாக நீக்கி சொந்த முதலில் இயங்கினால் இந்நிலைப்பாட்டை முற்றாக நீக்கிக்கொள்ளலாம். சொந்த முதலில் இயங்கும் சங்கங்களில் இந்நிலை பெருமளவில் குறைந்து காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மேலைத்தேச நாடுகளின் அரசாங்கங்கள் தமது நாட்டின் பொருளாதார விருத்தியை ஏற்படுத்துவதில் கூட்டுறவு நிறுவனங்களின் பங்கு, பணிகளை பெருமளவில் எதிர்பார்க்கவில்லை. ஆனால் குறை விருத்தி நாடுகளிலும் பொதுவுடமை நாடுகளிலுமுள்ள அரசாங்கங்கள் தமது நாட்டின் பொருளாதார விருத்தியை ஏற்படுத்தவும் தனது முக்கிய பணிகளைப் புரிவதற்கும் கூட்டுறவு நிறுவனங்களை முக்கிய கருவியாகப்பயன்படுத்தும் கொள்கையைப் பின்பற்றிவருகின்றன. இந்நாட்டு அரசாங்கம் வறுமை ஒழிப்புத் திட்டங்களை அமுல் நடத்துதல், மக்களுக்குரிய இலவச சேவைகளைப் புரிதல், விவசாயக் கடன்வாங்கல், சந்தைப்படுத்தல் திட்டங்களை அமுல் நடத்துதல், உணவுப் பங்கீட்டுத் திட்டங்களை அமுல் நடாத்தும் கிராமங்களில் வங்கிச் சேவையை விஸ்தரித்தல் போன்ற துறைகளில் கூட்டுறவு நிறுவனங்களை அரசாங்கம் முகவர்களாகவும் பிரதிநிதிகளாகவும் பயன்படுத்தி வருகின்றது. ஆதலால் இந்நாடுகளின் பொருளாதார விருத்தியின் முதுகெலும்பாக விளங்கும் கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகத்தில் ஏற்படும் தளம்பல்களும் ஊழல்களும் நாட்டின் பொருளாதார அமைப்பையே தளம்பச் செய்யுமென்ற பயத்தினால் அரசாங்கம் கூட்டுறவு நிறுவனங்களை மேற்பார்வை செய்யவும் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தவும் முயல்வதில் என்ன தவறுண்டு. இதுவும் பூரண யதார்த்தமான செயற்பாடே. இது ஜனநாயகத்திற்கோ, கூட்டுறவுக் கொள்கைகளுக்கோ, மக்கள் நிறுவனம் என்ற பண்பிற்கோ குந்தகமானதல்ல.

குறைவிருத்தி நாடுகளிலும் பொதுவுடமை நாடுகளிலுமுள்ள கூட்டுறவு நிறுவனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது அரசாங்கங்கள் எல்லை கடந்த சட்டக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதால் அந்நிறுவனங்கள் சுயமாகவும் சுதந்திரமாகவும் செயற்பட முடியாதிருப்பதால் இந்நிறுவனங்களைப் பூரண மக்கள் நிறுவனங்களாகக் கொள்ள முடியாததென்று விமர்சிக்கப்படுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

மக்களைப் பாதுகாப்பதற்காகவே சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சட்டங்கள் மனிதனுக்கு எதிரானவையல்ல. சட்டங்கள் இல்லாவிட்டால் மனிதவாழ்வே சீரழிந்து போய்விடும். இது போன்ற ஒரு நிறுவனத்தின் பாதுகாப்புக்கும் நல்லியக்கத்திற்கு சட்டங்கள் மிக அவசியமாகும். கூட்டுறவு நிறுவனங்களில் மோசடிகள் ஏற்படாமல் தடுப்பதற்காகவும் அவற்றைப் பாதுகாப்பதற்காகவுமே கூட்டுறவுச்சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சட்டக்கட்டுப்பாடுகள் பல இருக்கும் இன்றைய நிலையில்கூட கூட்டுறவு நிறுவனங்களில் பல ஒழுங்கீனங்கள் நிகழ்கின்றன. சட்டக்கட்டுப்பாடுகள் இல்லாவிட்டால் என்ன நடக்குமோ என்பதைச் சிந்திக்கவேமுடியவில்லை. ஆதலால் கூட்டுறவுச் சட்டக்கட்டுப்பாடுகள் **"கூட்டுறவு நிறுவனங்கள் மக்கள் நிறுவனங்கள்"** என்ற பண்புக்கு எதிரானவையல்ல, **"கூட்டுறவுச் சட்டங்கள் கூட்டுறவு நிறுவனங்களின் பாதுகாப்புக் கவசம்"** என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

ஒரு கூட்டுறவு நிறுவனம், நிர்வாகச் சீர்கேடுகளும், மோசடிகளும் தவறுகளும் முற்றாக இல்லாத நிலையில் சீரும் சிறப்புடனும் இலாபகரமாக இயங்கினால் எவரும் கூட்டுறவுச் சட்டக்கட்டுப்பாடுகளை அந்நிறுவனத்தின் மீது பயன்படுத்த முடியாது. நிர்வாகச் சீர்கேடுகளும் தவறுகளும் மோசடிகளும் இடம் பெற்றால் மட்டுமே அதனைப் புரிந்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, நிறுவனத்தைச் சீர்படுத்தமட்டுமே இச்சட்டக்கட்டுப்பாடுகளை எவரும் பயன்படுத்தலாம். சிறப்பாக இயங்கும் சங்கங்கள் மீது இச்சட்டக் கட்டுப்பாடுகளை எவரும் நீதியீனமாகப் பயன்படுத்த முடியாது. அவ்விதம் எவராவது தவறாகப் பயன்படுத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் சுயமான சுதந்திரமான செயற்பாட்டுக்குக் குந்தகம் விளைவித்தால் உயர் நீதி மன்றத்தில் முறையிட்டு நீதியைப் பெற்றுக்கொள்ள வசதிசெய்யும் சட்ட ஏற்பாடுகள் **"இயற்கை நியதிச் சட்டக் கோவையில்"** சேர்க்கப்பட்டுள்ளன. ஆகவே கூட்டுறவுச்சட்டக் கட்டுப்பாடுகள் கூட்டுறவு நிறுவனங்கள் அரசசார்பற்ற பூரண மக்கள் இயக்கம் என்ற பண்பிற்கு ஊறுவிளைவிக்கவில்லை. இக்கட்டுரையில் கூறிய மேற்படி விளக்கங்கள் மூலம் கூட்டுறவு நிறுவனங்கள் பூரண மக்கள் நிறுவனங்கள் என்ற பண்பு பூரணமாக நிறுவப்பட்டுள்ளது.

*

**கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பம்சம்**

01. ஜனநாயக ரீதியான நிர்வாகம்.

02. இலாப நோக்கமற்றுச் செயற்படுதல்.

03. இலாபம் பகிர்தல்.

04. சமூக முன்னேற்றம் கருதி செயற்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**எஸ்.கே.சண்முகலிங்கம்**

உபதலைவர்,

புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்

அதிபர், யா/புங்.ஸ்ரீகணேச மகாவித்தியாலயம்


# ஒழுங்கற்ற இவ்வுலகில் காணப்படும் ஒரேயொரு சிறந்தமுறை கூட்டுறவு இயக்கம்

கூட்டுறவு என்ற சொல் வழக்கில் இரு வகைகளில் பொருள்கொள்ளப்படுகின்றது. இது "கூடிப்பணிபுரிதல்" என்ற பொதுவான வகையிலும், இப்போதுள்ள நடைமுறையில் "பரஸ்பர உதவி" என்ற பொருளிலும் அது கையாளப்படுகின்றது. இச்சொல் நீண்ட காலமாக குறிப்பிட்டவகை வர்த்தக நிறுவனங் களுக்கு உலகம் முழுவதும் பயன்படுத்தப் பட்டு வந்துள்ளது. குறிப்பாக பிரிட்டனில் இயங்கிய பலசரக்கு மொத்தவியாபார நிறு வனம்; மாவு ஆலை நிறுவனம், நைஜீரியா வில் பனை மரக்காய்களை சேகரிக்கும் ஆபிரிக்க நாட்டுப் பெண்களின் கூட்டம்; ஒன்றாகச் சேர்ந்து கடலில் மீன்பிடிக்கச் செல்லும் அயர்லாந்து நாட்டு மீனவர்கள்; கொள்ளைநோய் போன்றவற்றில் இருந்து தமது கால்நடைகளை காப்பதற்கு காப்பீடு செய்து பாதுகாக்கும் பிரெஞ்சு நாட்டு விவ சாயிகள், கனடாவின் பிரெஞ்சு சமவெளியில் விளைவிக்கப்படும் கோதுமையை விற்ப னைக்கு அனுப்பிய விவசாயிகள், தமக் கென ஒரு வங்கியை நடாத்தும் மலாயா நாட்டு எழுத்தாளர்கள், இராணுவ உடைகளை தைத்துக் கொடுக்கும் சோவிய பெண்கள், நோயுற்றபோது தமது உற்றார், உறவினர் களை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல் லும் சேர்பிய குடியானவர்கள் ஆகியவர் களைக் குறிப்பிடலாம்.

இவர்களிடம் காணப்படும் பொதுவான அம் சம் அவநம்பிக்கையின்றி உதவிமனப்பான்மை மற்றும் கூடி உழைக்கும் முயற்சிகள் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு நடை பெறும் முயற்சிகள் கூட்டுறவின் அடிப்படை யிலே, செயல்முறைப் பொருளாதார அமைப் பாக நாம் கருதமுடியும்.

கூட்டுறவுச் சங்கமானது எளியவர்களி டையே எக்காலத்தும் தன்னல நோக்கமின்றி கூட்டாக வர்த்தக நடவடிக்கைகளை மேற் கொள்ளும் நோக்கத்துடன் உருவாக்கப் பட்ட நிறுவனமாகும். அந்த நிறுவனத்தின் நடைமுறையில் எந்தளவுக்கு பொறுப்பெடுத் துக் கொள்கின்றார்களோ அந்தளவிற்கு அதன் அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் பிரதிபலன் கிடைக்குமென 1908ஆம் ஆண்டில் சி.ஆர். ஃபே என்ற அறிஞர் கூட்டுறவுச் சங் கத்தின் தன்மையை வரையறை செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவு முறையில் செய்யக்கூடிய காரியங்கள் எல்லாம் வர்த்தக நடவடிக்கை என்ற குறுகிய சொல் அமைப்பால் அடங்கி விடாது. கலாநிதி ஆ.மிலாடினாஸ் என்ற ஆய்வாளர் எல்லாவகை கூட்டுறவு நிறுவனங்களிலுமுள்ள பொதுவான அம்சங்களை இவ்வாறு விளக்கியுள்ளார். "தங்களுடைய பொதுவான ஒரு நோக்கத்தைப் பரஸ்பர உதவியினால் நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு அதன் நிமித்தம் ஏற்படக்கூடிய ஊறுகளுக்கு உட்பட்டு அப்போது முயற்சிக்கு வேண்டிய மூலதனத்தையும் அளித்து கூட்டாக ஒரு பொருளாதார அமைப்பின் மூலம் சிறுசிறு உற்பத்தியாளர்களும் உபயோகிப்பவர்களும் ஏற்படுத்திக்கொள்ளும் ஓரமைப்பே கூட்டுறவுச் சங்கம் எனப்படும்" என்கின்றார்.

கூட்டுறவு இயக்கமானது, முதலாளித்துவம், தனியார் வியாபாரமுறை ஆகியவற்றின் ஒரு விசேட அம்சமாக சில சிந்தனையாளர்களால் கருதப்பட்டாலும் அது பொருத்தப்பாடுடையதாகவில்லையெனலாம். ஆனால் ஒரு சாரார், அது ஓர் சோசலிசத்தின் ஓர் உருவகமாகவும், கொள்ளப்படுகின்றது தவிர சோஸலிச சமுதாயத்தின் முன்னோடி நடவடிக்கையெனவும் கருத வாய்ப்புள்ளது.

"ஒழுங்கற்ற இவ்வுலகில் காணப்படும் ஒரே ஒரு சிறந்தமுறை கூட்டுறவு இயக்கம் என்பதில் எவருக்கும் கருத்துவேறுபாடு தோன்ற இடமில்லையென உறுதியாகக் கூறலாம். தனிப்பட்டமுதலாளியின் முறையற்ற சக்திகளினின்றும் சமுதாயத்தைக்காக்கும் பாதுகாக்கும் கேடயம் எனவும் வரையறை செய்யலாம். கூட்டுறவு இயக்கம் இலங்கையில் மட்டுமல்லாமல் உலகநாடுகள் எல்லாம் சிறப்பாக வியாபித்து வளர்ச்சி கண்டுள்ளது. பிரான்சில் 1838ஆம் ஆண்டு லியான்ஸ் நகரத்தில் கார்மஸ் வெரிடிக் எரி சோசியல் (Commerce Veridique Et Social) என்னும் பெயரில் கூட்டுறவு அமைப்பு உருவாகியது. ஜேர்மனியில் 1922இல் தொழில் பண உதவி கூட்டுறவு சங்கம் (Schulze Delitzsch) என்ற பெயரில் ஆரம்பமானது. ஜப்பானில் கூட்டுறவு அமைப்பு இரண்டாம் உலகப்போரின் போது நல்ல வளர்ச்சி கண்டாலும் ஜப்பானுக்கு அருகிலுள்ள அண்டைநாடான சீனாவில் இப்போதுதான் வளர்ச்சி காணப்படுகின்றது. அமெரிக்காவின் மத்திய மேற்குப்பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் சுவீடன் முதலிய நாடுகளில் செயற்படும் கூட்டுறவு அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு 1936ம் ஆண்டுக்குப்பின் வளர்ச்சி கண்டுள்ளது.

யூகோஸ்லேவியாவில் அந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் மத்தியிலே ஆரம்பத்தில் சிறப்புற்றிருந்தது. இரண்டாவது உலகப் போருக்கு முன்பிருந்தே இவ்வமைப்பு பிரபல்யம் பெற்றிருந்தது. இவ்வமைப்பு அரசாங்க ஊழியர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்தது. பல்கேரியாவில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் முதலில் சிறியதாக செயற்பட்டு வந்தாலும், அரசாங்கத்தையே ஆட்டிப்படைக்கும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது. ஐரோப்பாவிலும் சோவியத் ரூசியாவிலும் ஆரம்பத்தில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சிபெறாமல் இருந்தது. மக்களின் புரட்சிகரமான சிந்தனைகளால், இந்நாடுகளில் சகலதுறைகளிலும் கூட்டுறவு அமைப்பு வேரூன்றி நல்ல வளர்ச்சி கண்டுள்ளது.

உலக நாடுகளில் எல்லாம் கூட்டுறவு இயக்கம் பெருவிருட்சமாக அமைந்திருந்தாலும் சில தடைகளை எதிர்கொண்டுதான் வருகின்றன. நியாய விலையில் பொருட்களை கொள்முதல் செய்ய முடியாமை நாணயமும் திறமையுமுள்ள பணியாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்காமை ஆகிய காரணங்களால் பின்னடைவுகள் சந்திக்க வாய்ப்பு அதிகமாகவுள்ளது. இவைகளையெல்லாம் வெற்றிகரமாக சமாளிப்போமானால், கூட்டுறவால் நாட்டை வளம்படுத்தலாம்.

*

**நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பான சட்டங்கள்**

01. 1964 ஆம் வருட 37ஆம் இலக்க அளவை நிறுவைச் சட்டம்.

02. 1950 ஆம் வருட 29ஆம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

03. 1979 ஆம் வருட 01ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்.

04. 1980 ஆம் வருட 26ஆம் இலக்க உணவுச் சட்டம்.

05. 1986 ஆம் வருட 06ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவகச் சட்டம்.

06. 1987 ஆம் வருட 01ஆம் இலக்க நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐயா சச்சிதானந்தம்**

# யாழ்.குடாநாட்டின் கூட்டுறவு இயக்கம்

கூட்டுறவு என்பது பலர் ஒன்றிவாழ்தல்; அல்லது ஒன்றுசேர்தல் என்று பொருள்படும்.

ஒத்துழைப்பு, ஐக்கியம் என்ற சொற்களும் இதே கருத்தைத் தெரிவிக்கின்றன.

மக்கள் குழுமம் ஒருமித்து ஒற்றுமையாக ஒருபயனை அடைய சில நிபந்தனைகளுக்கு அமைய முயற்சிப்பதே கூட்டுறவு இயக்கம் உருவாக வழிவகுத்துள்ளது.

எமது மூதாதையர் சேர்ந்து வாழ்வதே வலிமை என்பதை பலமுறை இடித்துச் சொல்லியதால், நாமெல்லாம் ஒற்று மையாக ஐக்கியமாக வாழப்பழகிவிட்டோம். அவர்களது சிந்தனையே கூட்டுறவு இயக்கம் தமிழ்ப்பகுதிகளில் வேரூன்றுவதற்கு வழி கோலியதாகும்.

அன்புவழியில் ஒற்றுமையாக வாழப்பழகிய மனிதகுலத்தில் கூட்டுறவு இங்கிலாந்து தேசத்தில் நூற்றியைம்பது ஆண்டுகளுக்கு முன்பாக பொருளாதாரத்துறையில் பெரிய மாறுதலை ஏற்படுத்திவிட்டது. விவசாய முயற்சிகளும் குடிசைத் தொழிலும் இயந்திரமயமாக மாறின. தொழிலாளர் வாழ்வில் கூட்டுறவுத்துறை புகுந்ததால் தொழிலாளர்வர்க்கம் அடிமை நிலையில் இருந்து விடுபட்டனர்.

முதல் முதலில் உலகில் கூட்டுறவுத் துறையை சொல்லாலும் செயலாலும் எழுந்தாலும் நடைமுறைப்படுத்திக் காட்டிய பெருமை றொபேட் ஓவன் (Robert Owen) என்பவரையே சாரும். அவரது செயற்பாடுகளை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதற்கு "நெருக்கடிகள்" என்ற பத்திரிகையையும் வெளியிட்டிருந்தார் என்பது வரலாறாகும்.

இலங்கையில் கூட்டுறவு அமைப்பு 1911 ஆம் ஆண்டு தொகுத்த சட்டத்தின்கீழ் 1912 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி தென்மாகாணத்தில் மாத்தறையின் வெல்லப்பட என்னுமிடத்தில் கூட்டுறவு நாணயச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதுடன் வரலாறு ஆரம்பமாகியுள்ளது.

ஆனால் யாழ்.குடாநாட்டில் 1916ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கரவெட்டி ஐக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணய சங்கமாக உருவாகியதாக வரலாறு கள் உண்டு.

அரைநூற்றாண்டு காலமாக இச்சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு நாணயமாக சேவையாற்றியதாக கூட்டுறவுத்துறை சார்ந் தோர் பலர் பேசியதுண்டு.

1966ம் ஆண்டு அனைத்துலகக் கூட்டு றவு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு, ஆராய்ந்து தீர்மானிக்கப்பட்ட பின், பிரகடனப்படுத்திய ஆறுகொள்கைகள் இன்றைக்கு கூட்டுறவு இயக்கத்தை வலுவுள்ள இயக்கமாக மாற்றி யுள்ளன. தன்விருப்பார்ந்த தடையற்ற உறுப் புரிமை, ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும் நிர்வாகமும், முதலுக்கு மட்டுப் படுத்தப்பட்ட வட்டிவீதம், இலாபம் அங்கத்த வரிடையே சமத்துவமாக பங்கிடல்; கூட்டுறவு கல்வி, கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒத்துழைப்பு ஆகியவை நடைமுறைப்படுத் தப்படவேண்டுமென வலியுறுத்தி நிற்கின் றன.

நம்மிடையே நிலவும் சமத்துவமின்மை யும் பதவிமோகமும் ஒருவேளை இவற்றை நடைமுறைப்படுத்துவதில் தடங்கல்கள் இருந் தாலும் பலராலும் “கூட்டுறவாளன்” என்ற அடைமொழியால் வளர்க்கப்பட்டு வருகின்ற தென்ற உண்மையையும் மறைக்கமுடியா துள்ளது.

இலங்கையின் கூட்டுறவு இயக்கம் முத லில் ஐக்கியநாணய சங்கமாக வளர்ச்சி கண்டாலும், பின்னர் கூட்டுறவுப் பண்டக சாலைகளாக உருவாக்கம் பெற்றன.

ஆனால் குடாநாட்டின் கூட்டுறவுத் துறையோ யாழ்ப்பாண மலையாள புகை யிலை ஐக்கிய வியாபார சங்கமாக (The Jaffna Malayalam Co.op Tobacco Sale Society) ஆக 1934ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இச் சங்கத்தின் அங்கத்தவர்களின் விவேகமும் நேர்மையும், பொறுப்புணர்ச்சியும் குடாநாட்டுப் புகையிலை உற்பத்தியாளர்களுக்கு பெரு லாபத்தை ஈட்டிக்கொடுத்தது. இன்றைக்கு வரலாறு தெரியாத எம்மவர்க்கு பண்ணை யில் சுவரோவியங்கள் நிறைந்த கட்டடங்கள் இருந்தும் எமது கலாசார சின்னங்கள் மண் ணோடு மண்ணாக அழிக்கப்பட்டிருப்பதும் தெரியாத விடயங்கள். இங்கிருந்துதான் மலையாளத்துக்கு புகையிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.

வடமாகாணத்தில் ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவு சங்கங்கள் ஒன்று சேர்ந்து 1942இல் ஒரு சமாசத்தை ஏற் படுத்தின. இச்சமாசத்தில் 1950ம் ஆண்டு பதினாறு சங்கங்கள் இணைந்திருந்தன. இச்சமாசம் 1951ம் ஆண்டு மட்டும் 694502 ரூபாய்க்கு வர்த்தக நடவடிக்கையில் ஈடு பட்டு 51,662 ரூபாயை லாபமாக ஈட்டியிருந்த தாக வரலாறு கூறுகின்றது. இங்கேதான் நாம் கூட்டுறவாளர்களின் தன்னலமற்ற தொண்டை ஒருமுறை நினைத்துப்பார்க்க வாய்ப்பாகவுள்ளது.

இலங்கையில் முதல் முதலாகப்பதிவு செய்யப்பெற்ற மாகாணவங்கி யாழ்ப்பாணக் கூட்டுறவு வங்கியாகும். இது 1929ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப் பட்டது. இதில் ஆரம்பத்தில் சில கூட்டுறவு நாணய சங்கங்களும் சில தனிப்பட்ட கூட் டுறவாளர்களும் அங்கத்தவராக இணைந் திருந்தனர். காலப்போக்கில் எழுநூறுக்கும் அதிகமான சங்கங்கள் அங்கத்துவம் பெற்றி ருந்தது மட்டுமல்லாமல் வங்கியின் மூல தனம் ஐம்பது லட்சத்தையும் தாண்டியிருந் தது. ஐம்பதுகளில், இவ்வங்கி மூலம் பல்லா யிரம் பேர் பலலட்சங்களை கடனாகவும் பெற்று திரும்பச் செலுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகாலத்தில் தீவுப்பகுதியில் வாழ்ந்தவர்கள் பிரசவத்திற்காக யாழ்ப்பாணம் வந்தால், திரும்பிப்போகும்போது பிறந்தமகன் சிறுநடை நடந்து செல்வான் என்பது அன்றைய சிலேடையாக இருந்தது. இந்த நிலைமை மாற்றியமைத்த பெருமை 1932ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தீவுப்பகுதிக் கூட்டுறவு மோட்டார் வள்ளச்சங்கம் மாற்றியமைத்தது. இச்சங்கம் அமெரிக்காவில் இருந்து கருமல் நாகபூசணி என்னும் வள்ளத்தை விலைக்கு வாங்கி யாழ்ப்பாணத்துக்கும் ஊர்காவற்றுறைக்கும் மட்டுமல்லாமல், நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவுக்கும் போக்குவரத்தை இலகுவாக்கி கூட்டுறவு இயக்கத்தின் செழுமையை மக்கள் உணர வைத்தது.

இன்றைக்கு நாம் இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்களிலும், மினிபஸ்களிலும் பயணம் செய்கின்றோம். 1945ம் ஆண்டு மாசி மாதத்தில் வடமாராட்சி ஐக்கிய மோட்டார் சங்கம் இலங்கையில் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு சேவையிலான போக்குவரத்துச் சேவையாக நடைபெற்றது. இச்சங்கம் அந்தநாட்களில் பத்து பஸ்களை வாங்கி தொண்டைமானாறுக்கும், மானிப்பாய்க்கும், பருத்தித்துறைக்கும் சாவகச்சேரிக்குமிடையில் தடங்கல் இல்லாமல் சேவையாற்றியது மட்டுமல்லாமல் பல லட்சங்களை இலாபமாக ஈட்டியது.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை 1936 இல் ஆரம்பிக்கப்பட்டு வைத்திய சேவையில் தடம்பதித்தது. தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை 1949இல் உருவானது. யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு பதிப்பகம் 1951ல் உருவாக்கப்பட்டிருந்தது. தொல்புரம் மூளாய் பரஸ்பர சகாயச்சங்கம் 1925ல் செயற்படத் தொடங்கியது. இவ்வாறாக எந்தத் துறையை நோக்கினாலும் குடாநாட்டின் கூட்டுறவு வரலாறு நூற்றாண்டைக் கொண்டது. இன்றோ நாம் வீரசிங்கம் மண்டபத்தை அண்ணாந்து நோக்கியவாறு ஏங்கி நிற்கின்றோம்.

*

## வைப்புக் காப்புறுதி (Deposit Insurance)

மத்திய வங்கியினால் 1987இல் அறிமுகப்படுத்தப்பட்ட இக்காப்புறுதித் திட்டத்தின்படி நிதி நிறுவனங்கள் வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் வைப்புக்களில் குறித்த வீதத்தை மத்திய வங்கிக்கு காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். வங்கி முறிவடைந்தால் இத்திட்டத்தின்படி ஒரு இலட்சம்வரை வாடிக்கையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும். வணிகவங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் ஆகியவை இத்திட்டத்தில் இணைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்திட்ட கருத்துரையாடல்





UNDP அமைப்பினால் வழங்கப்பட்ட
ரூபா பத்து இலட்சம் கடன்திட்டம் பற்றி
மக்களுடன் தலைவரும், உபதலைவரும்
கருத்துரையாடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நா. விசுவலிங்கம் J.P**

# "தீவக மக்கள் வாழ்வில் கூட்டுறவு"

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்பது முதுமொழி. இதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர்கள் தீவுப்பகுதி மக்களாவர்.

இலங்கையில் கூட்டுறவு இயக்கம் வட பகுதியில் சிறப்பாக வளர்ந்ததென்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை.

இதில் தீவுப் பகுதி மக்களிடையேதான் கூட்டுறவு துரிதமாக வளர்ச்சி அடைந்ததென்பதில் ஐயமில்லை.

நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் என்பது "ஐக்கிய நாணய சங்கம்" என்ற பெயரில் நடைமுறைக்கு வந்தது. இது மக்களின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாதிருப்பதை அறிந்து கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் பல்வேறு நிலையங்களை நிறுவி மக்களுக்கு அரசாங்கத்தினால் சேவையாற்ற முடிந்தது.

இது "சங்கக்கடை" என்ற பெயரில் மக்களுக்கு நுகர்பொருள்களை வழங்கிப் பணியாற்றியது.

இந்த அடிப்படையில் தீவுப்பகுதி மக்கள் கூட்டுறவில் நாட்டங்கொள்ளத் தொடங்கினர். முன்னோடியாக - புங்குடுதீவு - நயினாதீவு - அனலைதீவு - எழுவைதீவு - வாழ்மக்கள் தமது போக்குவரவுக்காக ஓர் சங்கம் நிறுவி அதன்பேரில் தமது பிரயாண வசதிகளை இலகுவாக்கிக்கொண்டனர்.

இதுவே "தீவுப்பகுதி மோட்டார் வள்ள ஐக்கிய சங்கம்" என்ற பெயரில் ஓர் சங்கம் 1932இல் ஆரம்பிக்கப்பட்டு தீவுப்பகுதி மக்களின் போக்குவரவுக்கான சேவைகளை ஆற்றத் தொடங்கியது.

இது தீவுப்பகுதி மக்களின் முதலாவது போக்குவரவு கூட்டுறவு இயக்கமாகும். எல்லாத் தீவுமக்களும் கூட்டாக இணைந்து செயற்பட்டமையால் இதன் சேவை வளரத் தொடங்கியது.

காலப்போக்கில் பல்வேறு பிரயாணவசதிகள் ஏற்பட்டுப் போக்குவரவில் மாற்றம் ஏற்பட்டது. குறிப்பாகப் புங்குடுதீவு - பண்ணைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலம் அமைக்கப்பட்டமையால் மக்கள் எல்லோரும் குறிப்பாகச் சகல தீவுமக்களும் பெரும் பிரயாணவசதி பெற்றனர்.

அடுத்தபடியாக நாட்டின் நிலைமை காரணமாக தீவுப்பகுதி மக்கள் தமது நுகர் பொருட்களைப் பெறமுடியாது. அல்லற்பட்டனர். இந்த நிலையில் அப்போது தீவுப்பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்த கா. பொ.இரத்தினம் அவர்கள் உதவியுடன் "புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்" ஆரம்பிக்கப்பட்டது.

இது ஒரு முன்னோடி நடவடிக்கையாக அமைந்தது.

தீவக மக்களுக்குரிய சகல தேவைகளையும் இந்தப் ப.நோ.கூட்டுறவுச் சங்க மூலமே பெறமுடிந்தது.

புங்குடுதீவு - நயினாதீவில் மட்டுமே சுமார் இருபது சங்கக் கிளைக் கடைகளும் மக்கள் கடைகளும் ஆரம்பிக்கப்பட்டன. கூட்டுறவுக் கிராம வங்கியும் ஆரம்பிக்கப்பட்டு மக்களுக்குச் சேவையாற்றி வந்தது.

சங்கத்திற்குப் புதிய பணிமனை புங்குடுதீவில் அமைக்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவர். இடைப்பட்டகாலத்தில் கொழும்பில் இருந்து தீவுப்பகுதிக்கு நுகர் பொருட்களை எடுத்துவரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இதனைப் புங்குடுதீவு, நயினாதீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமே முன்னின்று நடத்தியது.

யார் எதைக் கூறிய போதிலும் அக்காலச் சூழ்நிலையில் தீவுப்பகுதி மக்களுக்குரிய நுகர்பொருட்களை விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சங்க நிர்வாகிகளைப் பாராட்ட வேண்டும். அவர்களின் பெருமுயற்சியே தீவுப்பகுதி மக்களின் நுகர்பொருட் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்ததெனலாம். மற்றும் அதன் வளர்ச்சியினை மக்கள் தற்போது சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

விசேடமாக நயினாதீவு - குறிகட்டுவானுக்கு இடையே ஓர் படகுச் சேவையினை நடாத்த வேண்டும் எனச் சங்கம் முனைந்து ஓர் படகினைக் கொள்வனவு செய்து சேவைக்குவிட்டது. அதுவே "செந்தாரகை - அபிராமி" என்ற பெயரில் குறிகட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையே இன்றும் சேவையில் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு சேவைபுரிந்த புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்க முன்னைய நிர்வாகிகளு தற்போதுள்ள நிர்வாகிகள் ஊழியர்கள் எல்லோரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

சங்கச் சேவையினைப் பற்றி இம்மலரில் பலரும் குறிப்பிட்டுள்ளபடியால் விபரமாக எழுதவில்லை. *

01. ஒரு தனி ஆளின் பழக்க வழக்கங்களின் கூட்டு மொத்தமே ஆளுமையாகும்.

**- வட்சன்.**

02. இலங்கையில் பயிர்க் காப்புறுதியை மேற்கொள்ளும் இரண்டு நிறுவனங்கள்

1) விவசாய காப்புறுதிச் சபை 2) சிலிங்கோ காப்புறுதிக் கம்பனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.தி.சதாசிவம்
இளைப்பாறிய அதிபர்

# புங்குடுதீவில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

**1938**ஆம் ஆண்டு நடந்த உலகயுத்தங் காரணமாக எல்லா நாடுகளிலும் உணவுப் பொருள்களும் ஏனையபொருள்களும் விருத்தி குறைந்து காணப்பட்டபோது இலங்கை அரசாங்கம் நாட்டு மக்களின் நலன் கருதி பொருள்கள் வாங்குவதற்கு ஏற்றமுறையில் **கூப்பன் மூலம்** அரிசி, மா, சீனி சரக்கு வகைகள், எண்ணெய் வகைகள் இவற்றை யாவரும் சமமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற பெரு நோக்குடன் மக்கள் அனைவருக்கும் கூப்பன் வழங்குந் திட்டத்தைக் கொண்டு வந்தது.

எமது ஊராகிய புங்குடுதீவிலும் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. முதலில் நாட்டில் உள்ள உத்தரவுபெற்ற வர்த்தக நிலையங்களுக்கே கூப்பன்கள் பதியப்பட்டன.

அந்த வகையில் மக்கள் சிலர் சாப்பாட்டு பொருள்களைப் பெறுவதில் சிரமப்படுகிறார்கள் என அறிந்த பெரியோர்கள் சிலர் கூடி ஆராய்ந்து முடிவில் புங்குடுதீவு மர்த்தி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயருடன் புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தில் திருவாளர் நா.பொன்னையா அதிபர் அவர்களும் திருவாளர் வே.கதிர்காமர் (செல்லத்தம்பி) ஆசிரியர் அவர்களும், திருவாளர் ஆ.சரவணமுத்து உடையார் அவர்களும் திருவாளர் அ.சபாபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்களும் இன்னும் சிலருங் கூடி அச்சங்கத்தினைப் பதிவு செய்து இயங்க வைத்தனர்.

இதனை அறிந்த புங்குடுதீவு கிழக்கு கிராமசேவையாளர் திரு.மு.சின்னத்துரை அவர்களும் திருவாளர் க.குணமாலை ஆசிரியர் அவர்களும் இன்னும் சில பெரியோர்களும் கூடி புங்குடுதீவு கிழக்கிலும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தினை ஆரம்பித்துப்பதிவு செய்து கொண்டனர்.

இதன் பயனாகத் தனியார் வர்த்தக நிலையங்களில் பதியப்பட்ட பல கூப்பன்கள் மேற்படி சங்கங்களுக்கு மாற்றப்பட்டன.

சங்கத்தினை நல்லமுறையில் நடாத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கு முற்பணம் தேவைப்பட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்களைச் சேர்த்து வேண்டிய பணத்தைப் பெற்றனர்.

அந்த வகையில் 1940ஆம் ஆண்டளவில் இக் கூட்டுறவுச் சங்கங்கள் நன்கு இயங்கத் தொடங்கின.

பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு யாழ்ப்பாணம் செல்வது வசதிக்குறைவாய் இருந்தமையால், அக்காலம் பிரபல வியாபா ரத்தலமாக விளங்கிய ஊர்காவற்றுறைப் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் தனியார் வியாபாரிகளும் கூட்டுறவுச் சங்க முகாமை யாளர்களும் கூப்பன்களைக் கொடுத்து அரிசி, மா, சீனி முதலியவற்றைப் பங்கீட்டின் படி பெற்று வத்தைகளில் ஏற்றிக் கடல் மார்க்கமாகப் புங்குடுதீவு புளியடித்துறை என்னும் இடத்திற்குக் கொண்டு வந்தனர்.

அங்கிருந்து மாட்டுவண்டிகள் மூலம் தங்கள் தங்கள் வியாபாரத்தலங்களுக்குக் கொண்டு சென்று மக்களுக்கு விநியோகஞ் செய்தனர்.

மக்களின் நலத்தை மனத்திற் கொண்ட திருவாளர் வே.கதிர்காமர் ஆசிரியர் (செல லத்தம்பி) அவர்கள் அப்பொழுது மேற்பார் வையாளர்களாய் இருந்த கூட்டுறவு இன்ஸ் பெக்டர் குக் அவர்கள் உதவி மேற்பார்வை யாளர் கூட்டுறவு இன்ஸ்பெக்டர் - யோ.சவுந் தரராசா அவர்கள் ஆகியோகளின் உதவி யுடன் 1ஆம் வட்டாரத்தில் 1942இல் "புங்குடு தீவு பெருங்காடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்" என்ற பெயருடன் ஒன்றை ஆரம் பித்து அதனையும் பதிவுசெய்து இயங்க வைத்தார்.

இவ்வாறாக இறுபிட்டி 4ம் வட்டாரத் திலும் 5ம் வட்டாரத்திலும் ஒவ்வோர் சங்கக்கடைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அதே போல் புங்குடுதீவு கிழக்கிலும் சில சங்கக் கடைகள் ஆரம்பித்து நடாத்தப்பட்டன.

இப்படி சங்கக்கடைகள் மூலம் புடைவை களும் கொள்வனவு செய்து விநியோகிக்கப் பட்டன.

இவ்வாறாகப் பொருள்களை வழங்க வசதி யாகப் புங்குடுதீவு மத்தியில் ஓர் இடத்தைத் தெரிவு செய்து பொதுவான கட்டடத்தில் பொருள்களைவைத்து அதற்கு திருவாளர் மு.வ.கதிர்காமர் என்பவரை முகாமையாளர் ஆக்கினார்கள்.

அவரும் கொழும்பு செல்ல வேண்டி வந் தமையால் அவரது இடத்திற்கு 1942இல் திருவாளர் ஆ.ந.தம்பிராசா அவர்களை முகா மையாளராகவும் திரு.தி.பரநிருபசிங்கம் என் பவரை உதவியாளராகவும் அமைத்தனர்.

முகாமையாளர் மாறிச் செல்ல அந்தப் பதவிக்குத் திருவாளர் ச.குழந்தைவேலு என்பவரை அமைத்தனர்.

உதவியாளர் திரு.தி.பரநிருபசிங்கம் 1943 ஆம் ஆண்டளவில் பெருங்காடு பலநோக் குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளராகப் போக உதவியாளராகக் கணக்காளர் திரு.ஆ. சிவசாமி என்பவர் உதவிகள் செய்துவந்தார்.

இவர்களும் மாறிச்செல்ல, இடமும் மாற் றப்பட்டு 1ஆம் வட்டாரத்தில் (சந்தைக்கு அருகாமையிலுள்ள) திருவாளர் நல்லதம்பி ஆசிரியர்வீட்டில் அதனை அமைத்து அதற்கு வேலணையைச் சேர்ந்த திருவாளர் சி.கனக ரெட்ணம் என்பவர் பொது முகாமையாளரா கக் கடமை ஏற்றார்.

பின்னர் பலரதும் ஆலோசனைகட்கிணங்க 1970ஆம் ஆண்டளவில் எல்லாச் சங்கங்க ளையும் ஒன்று சேர்க்கும் நோக்குடன் சட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தரணி திருவாளர் ப.கதிரவேலு அவர்களைப் பிரதம மேற்பார்வையாளராக அமர்த்தினார்கள்.

அக்காலத்திலும் புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் கூட்டுறவுச்சங்கம், ஊரைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் போன்றன உண்டாக்கப்பட்டன. இவற்றிற்கு திருவாளர். சு.யோ.பூராசா ஆசிரியர் உதவியாகக் கடைமைகள் ஆற்றி வழிப்படுத்தினார். பொது வியாபாரத்தலத்திற்கு நிரந்தர கட்டடம் அமைக்கும் நோக்கத்துடன் தபாற்கந்தோர் அருகில் உள்ள ஓர் காணியை வாங்கி திரு.ப.கதிரவேலு அவர்களும் மற்றைய சங்கங்களில் தலைவர்களும் சேர்ந்து கட்டடம் அமைத்து அதற்கு "புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்" என்ற நாமம் சூட்டப்பட்டது. திரு. சு.யோ.பூராசா அவர்களும் வங்கி முகாமையாளராகக் காலஞ்சென்ற ஆசிரியர் து.வசந்தகுமார் என்பவர் கடமையாற்றிட வந்தார்.

காரணம், இந்த நிர்வாகக்குழு வருடந்தோறும் அங்கத்தவர் வாக்குப்படி தெரிவு செய்யப்படுவார்கள். 1970ஆம் ஆண்டின் பின்னரே - கிராமியவங்கி என்ற வங்கியும் அமைக்கப்பட்டுச் செயலாற்றிவந்தது. நயினாதீவில் நடாத்தப்பட்ட மூன்று சங்கங்களும் பொருள்களைச் சுலபமாக வாங்கிச் செல்லும் வசதி நோக்கி இவர்களுடன் இணைந்தமையாகும்.

இவற்றையெல்லாம் சீராக நடாத்துவதற்கு வசதியாக ஏழுபேரைக் கொண்ட ஒரு நிருவாகக் குழுவை அமைத்தல் நன்று என எண்ணிய மேற்பார்வையாளர் திரு.ப.கதிரவேலு அவர்கள் புங்குடுதீவு மக்கள் சார்பில் ஐந்துபேரையும் நயினாதீவு சார்பில் இரண்டு பேரையும் மக்களின் வாக்கு அநுமதியைப் பெற்று அமைத்து ஏழுபேரதும் பொறுப்பில் யாவும் விடப்பட்டன.

இவ்வாறாக நாளடைவில் புங்குடுதீவில் 16 கிளைகளும் நயினாதீவில் மூன்றுமாகப் பத்தொன்பது கிளைகள் அங்கம் வகித்தன. அந்த ஏழுபேரில் ஒருவரைத் தலைவராகவுந் தெரிந்து வைத்து எல்லாக்கருமங்களையும் நடாத்தி வந்தனர்.

கூட்டுறவுத் திணைக்களத்தின் சங்கப் பொதுமுகாமையாளராக புங்குடுதீவுவாசி திருவாளர் வே.செல்லத்துரை B.A அவர்கள் தெரிவு செய்யப்பட்டார், 1971ம் ஆண்டு வரையில் எனலாம்.

இப்படியாகத் திரு.சி.சிறிகரன், திரு.ந. சபாரத்தினம் போன்றவர்களும் பொது முகாமையாளர்களாகக் கடமையாற்றியுள்ளார்கள்.

நிருவாகக் குழுத் தலைவராக திரு. சு.யோ.பூராசா ஆசிரியர், திரு.சி.வரராசசிங்கம், திரு செ.தில்லைநாதன் J.P போன்றவர்களும் கடைமையாற்றியுள்ளனர்.

தற்போது பொது முகாமையாளராக தற்போது செல்வி செ.செல்வராசா அவர்களும் தலைவராகத் திருவாளர் க.இராசரட்ணம் டாக்டர் அவர்களும் கடமையாற்றி வருகின்றார்கள்.

அக்காலந் தொடக்கம் நிரந்தர கணக்காளராகக் காலஞ்சென்ற சி.முத்துவேலு என்பவர் கடமையாற்றி வந்தார்.

சிட்டை போடுபவர்களும் சரிபிழை பார்ப்பவர்களும் காசாளரும் எனப்பலரும் அங்கு வேலை செய்து வந்தார்கள். *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆ. தியாகராசா**

**முன்னாள் உதவி அரசாங்க அதிபர் - வேலணை**

**தலைவர், நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய அறங்காவலர் சபை**

# இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி

1912ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 12ஆம் திகதி முதன் முதலாக இலங்கையில் ஐக்கிய நாணயசங்கம் ஒன்று மாத்தறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1916ஆம் ஆண்டு ஆவணி மாதம் வடமராட்சி - கரவெட்டியில் ஐக்கிய நாணய சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதுவே யாழ்.குடாநாட்டில் ஆரம்பமான முதல் கூட்டுறவு அமைப்பாகும்.

1925ஆம் ஆண்டில் தொல்புரம் - மூளாய் பரஸ்பர சகாயசங்கம் ஆரம்பம்.
1929ஆம் ஆண்டில் யாழ்ப்பாண ஐக்கிய மாகாணவங்கி ஆரம்பம்
1930ஆம் ஆண்டில் கண்டி மாவட்ட மாகாண வங்கி ஆரம்பம்
1931ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்ட மாகாண வங்கி ஆரம்பம்
1932ஆம் ஆண்டில் தீவுப்பகுதி கூட்டுறவு மோட்டார் வள்ளச் சங்கம்
1934ஆம் ஆண்டில் யாழ்ப்பாண - மலையாள புகையிலை வியாபார சங்கம்
1934ஆம் ஆண்டில் தெங்குப் பொருள் உற்பத்திச்சங்கம்
1936ஆம் ஆண்டில் மூளாய் ஐக்கிய ஆஸ்பத்திரி
1937ஆம் ஆண்டில் வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபை
1940ஆம் ஆண்டில் மின்னேரியா நெற்கொள்வனவு சங்கம்
1940ஆம் ஆண்டில் இந்துருவ பாய் முடைவோர் சங்கம்
1942இல் ஆண்டில் விளைபொருள் உற்பத்தியாளர் விற்பனைச்சங்கம்
1942இல் புல்லெண்ணை உற்பத்தியாளர் சங்கம்
1945இல் வடமராட்சி ஐக்கிய மோட்டார் சங்கம்
1945இல் கோப்பாய் ஐக்கிய சுருட்டுத்தொழிலாளர் சங்கம்
1947இல் அகில இலங்கை கூட்டுறவு சம்பந்த வங்கி
1948இல் நீர்வேலி காமாட்சி அம்பாள் கைத்தொழில் சங்கம்
1948இல் தம்பன் கடவை புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1948இல் | கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் | |
| 1950இல் | கூட்டுறவு றப்பர் உற்பத்தியாளர் சங்கம் | |
| 1949இல் | தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை | |
| 1951இல் | கூட்டுறவு பதிப்பகம் | |
| 1948இல் | கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனம் ஆரம்பம் | |
| 1943இல் | கண்டி - பொல்கொல்ல கூட்டுறவுக் கல்லூரி | |
| 1943இல் | கூட்டுறவு 'புதினம்' என்ற வெளியீடு 3 மொழிகளிலும் பிரசுரம் | |
| 1945இல் | "ஐக்கிய தீபம்" என்ற மாதசஞ்சிகை வெளியீடு (தமிழ்) | |
| 1945இல் | "சமுபகாரய" என்ற சஞ்சிகை ஆங்கிலம் - சிங்களம். | |
| 1944இல் | இரண்டாம் உலக மகாயுத்தத்தை தொடர்ந்து கூப்பனுக்கு அரிசி, மா, சீனி, மண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருள்களை வழங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் யாழ் குடா நாட்டில் ஆரம்பமாகியது. அனைத்து உதவி அரச அதிபர் பிரிவுகள் தோறும் இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. | |
| 1932ஆம் | வருடம் ஆரம்பிக்கப்பட்ட தீவுப்பகுதி கூட்டுறவு மோட்டார் வள்ளச் சங்கத்தை ஆரம்பித்து செயல் படுத்தியவர்கள் | |
| | சிவஸ்ரீ.நா.சாமிநாதக்குருக்கள் | - நயினாதீவு |
| | திரு.க.நாகமணி (புலவர்) | - நயினாதீவு |
| | திரு.நா.விசுவலிங்கம் | - புங்குடுதீவு |
| | திரு.யோகுப்பிள்ளை | - புங்குடுதீவு |
| | திரு.பெருமாள் | - அனலைதீவு |
| | திரு.மருதையினார் | - அனலைதீவு |
| | திரு.நமசிவாயம் | - எழுவைதீவு |

அவர்களைத் தொடர்ந்து செயற்பட்டு இன்னும் வாழ்பவர் திரு.நா.விசுவலிங்கம் - நயினாதீவு

யாழ்.குடாநாட்டின் கூட்டுறவின் பிதாமகர் என்று போற்றப்பட்ட அமரர் வி.வீரசிங்கம் அவர்களின் அனுசரணையுடன் சட்டத்தரணி 'அ.அருளம்பலம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்ததுதான். ஐக்கிய தீபம்' என்னும் மாதவெளியீடு 1945இல் வெளியிடப் பட்டது. 1912முதல் 1951வரை இலங்கையில் நடைமுறையில் இருந்த 7210 சங்கங்களின் விரிவுதான்தற்போது எம்நாட்டில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களாகும் என்றால் மிகையாகாது.

* *

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் இன்று ஓர் புதிய மேல் மாடிக் கட்டிடம் ஒன்று அமைத்து, அதன் திறப்பு விழாவை 30-09-2001இல் நடாத்த இருப்பதாகவும் இதையொட்டி மலர் ஒன்றை வெளியிட இருப்பதாகவும், அம்மலரில் எனது ஆசியுரை ஒன்று இடம்பெற வேண்டும் என்று இதன் பணிப்பாளர் சபையின் தலைவர் கேட்டுக்கொண்டார்.

அவர்களின் அன்பான வேண்டுகோளை மறுக்க முடியாத சூழ்நிலையில், இந்த ஆக்கத்தினை எழுதித்தர முடிவுசெய்தேன்.

இதனை ஆசியுரையாகவோ, வாழ்த்துரையாகவோ எப்படியோ ஏற்றுக்கொள்ளலாம்.

ஏன் இந்தமாதிரி கூறுகின்றேன் என்றும் பலர் பலவாறாக எண்ணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் இது தான், தீவுப்பகுதியில் ஆரம்பமான கூட்டுறவு அமைப்புக்கள் எத்தனை, எப்போது ஆரம்பித்தன, ஆரம்பித்த பெயர்களோடு எத்தனை சங்கங்கள் இப்போ இயங்குகின்றன என்று தலைவரிடமும், உடன் வந்த ஆசிரியரிடமும் கேட்டேன்.

ஏதும் தெரியாது ஐயா, தெரிந்தவர்கள் என்று இருக்கும் ஒரு சிலரிடம் விபரம் கேட்டோம்.

அவர்களும் பூரணமான பதிலைத் தரவில்லை என்றார்கள்.

இது இவர்கள் தவறு இல்லை.

"கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன நிலைதான்" எமது அமைப்புக்கட்கு ஏற்பட்ட நிலையென்று கூறினேன்.

என்றாலும் 1950ஆம் ஆண்டளவில் தீவுப் பகுதியில் இருந்து அரும் தொண்டாற்றிய சங்கங்கள் எவை அவற்றின் செயற்பாடுகள் எப்படி இருந்தன. நுகர்வோர் எப்படியெல்லாம் ஆர்வத்துடன் சங்கங்களை வளர்த்தார்கள், தன்னலம் இல்லா நிர்வாகப்பணியாளர்கள் எப்படியெல்லாம் செயற்பட்டார்கள், என்பதை சுருக்கமாக அவர்கட்கு எடுத்துக் கூறினேன்.

அப்படியானவர்களில் தீவுப்பகுதியில் தற்போது உயிருடன் இருப்பவர்கள் யார் யார் என்றும் கூறி அவர்களை நாடி அவர்கள் மூலம் ஆக்கங்களைப் பெற்று வெளியீடு செய்தால் எதிர்காலத்தில் உதவியாக இருக்கும் என்று கூறினேன்.

இதற்கு நீங்களே ஒரு ஆக்கத்தை தாருங்கள் என்று கூறினார்கள்.

வடமாகாணத்தில் கூட்டுறவுத்தந்தை என்று போற்றப்பட்டவர் அமரர் வீ.வீரசிங்கம் அவர்கள்.

இப்பெரியாரின் அயராத முயற்சியால் யாழ்ப்பாணத்தில் 1916ஆம் ஆண்டில் ஆவணி மாதம் வடமராட்சிப் பகுதி கரவெட்டி கிராமத்தில் ஐக்கிய நாணயசங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இதன்பின் யாழ்ப்பாணத்தில் பலதரப்பட்ட சங்கங்கள் ஆரம்பமாயின.

தீவுப்பகுதியில் இரண்டாம் உலகமகாயுத்த முடிபுக் காலத்தில் நுகர்வோர் நலம் பேணும் வகையில் கூட்டுறவுச் சங்கம், மோட்டார் படகுச் சேவைச்சங்கம், ஐக்கியசங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் என்பன ஆரம்பிக்கப்பட்டு நல்லமுறையில் செயற்பட்டன.

1960வரை நல்ல செயற்றிறனுடன் செயற்பட்ட இச்சங்கங்களின் செயற்பாடுகள் படிப்படியாக வலுவிளக்கத்தொடங்கின.

நாட்டை ஆண்ட அரசுகள் காலப்போக்கில் கூட்டுறவு அமைப்பு சட்டங்களை மாற்றி மாற்றி அமைத்தமையும், தனியார் வர்த்தக, போக்குவரத்து விருத்தியும், வங்கிகளின் செயற்பாடும் மக்களை கவர்ந்தன.

இலகு கடன்திட்டங்களால் நாணயசங்கங்கள் செயல் இழந்தன. தனியார் படகுச் சேவைவிருத்தியால் கூட்டுறவு படகுச்சேவை செயல் அற்றது. இதேபோன்று ஒரு நோக்கோடு ஆரம்பித்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கமும் பலநோக்கு அமைப்பாக மாறியது.

எனினும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெயர் மாற்றம் இன்றி ஓரளவு செயற்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று விழாவெடுக்கும் புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், முன்பு நயினாதீவிலும், புங்குடுதீவிலும் இயங்கிய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பே.

யான் 1987ஆம் ஆண்டு முதல் இச்சங்கத்தின் செயற்பாடுகளுடனான நடவடிக்கைகளைக் கவனிக்கும்பாணியில் தீவுப்பகுதிதெற்கு உதவி அரச அதிபர் பணிமனையில் இருந்த போதும், பின் 1991ஆம் ஆண்டு முதல் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றி 1998இல் ஓய்வுபெறும் வரையும். இச்சங்கத்தின் சேவை எப்படி எப்படியெல்லாம் ஒரு இக்கட்டான காலகட்டத்தில் செயற்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு நெறிப்படுத்தினேன். அப்படியான சூழ்நிலைகளில் சில சந்தர்ப்பங்களில், பணிப்பாளர்களுடனும், பணியாளர்களுடனும், மக்களின் நலன்கருதி சில நடவடிக்கைகளை எடுக்க நேரிட்டபோதும்.

இவர்கள் மனம்தளராது பூரணமான ஒத்துழைப்பை நல்கினார்கள்.

இவர்களின் சேவையுடன், தற்போது செயற்பட்டுவரும் நெறியாளர்களின் ஆக்க பூர்வமான திட்டங்கள் பலவகையாலும் விரிவு பெற்று மேலும்மேலும் வளர வேண்டும் என வேண்டிக்கொள்கின்றேன்.

நான் முன்பு கூறியது போல் இலங்கையில் கூட்டுறவு வளர்ச்சி பற்றிய ஒரு சிறு விபரக்குறிப்பை, அட்டவணைப்படுத்தி இத்துடன் இணைத்துள்ளேன்.

*

## நுகர்வோர் பாதுகாப்பச் சட்டத்தில் லேபல் தொடர்பான விதிகள்

இச்சட்டத்தின் கீழ் லேபல் தொடர்பான விதிகள் ஒரு பகுதியாகும். சிறப்பாக உணவு தொடர்பான, தகவல்களை பொதியிடல் மூலமாக நுகர்வோருக்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளவை:~ உற்பத்தியாளரின் பெயர், முகவரி, உற்பத்தி செய்த திகதியும் தொகையும், நுகர்வு செய்வது முடிவுற வேண்டிய (காலாவதியாகின்ற) கால எல்லை (திகதியும் மாதமும்), கட்டமைப்பு தொடர்பானவிபரம் ஆகியனவாகும். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி பொதி செய் பொருள் தீங்கானவையாகவோ, நுகர்வோர் சுகாதாரத்துக்குத் தீங்கானவையாகவோ இருக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லயன் டாக்டர் ராஜரட்ணம் J.P

தலைவர்



லயன் எஸ்.கே.சண்முகலிங்கம்

உபதலைவர்,



திரு.ஆ.பொன்னம்பலம் J.P.

நெறியாளர் குழு உறுப்பினர்

## மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடைய

# புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# PUNGUDUTIVU NAINATIVU M.P.C.S Ltd.

**05-07-1996இல் இருந்து 01-08-2001**

**வரையிலான காலப்பகுதியின்**

# செயற்பாட்டறிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு – நயினாதீவு
# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

எனது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய பொதுச்சபை உறுப்பினர் களே, சங்க அங்கத்தவர்களே கூட்டுறவாளர்களே, மற்றும் நாட்டு நலன் விரும்பிகளே.

எனது தலைமையின் கீழ் இயங்குகின்ற இயக்குநர்சபை புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தை 05-07-1996 அன்று பொறுப் பேற்றதிலிருந்து இன்று 01-08-2001 வரை எம்மால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளை அறிக்கையாக தங்கள்முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச் சியடைகின்றோம்.

லயன்.டாக்டர் க.இராஜரெட்ணம் J.P
தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயக்குநர் சபை உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | **லயன் டாக்டர் க.இராஜரெட்ணம்** *J.P* |
| **உபதலைவர்** | : | **திரு.எஸ்.கே.சண்முகலிங்கம்** |
| | | (அதிபர் - யாழ்.புங்குடுதீவு ஸ்ரீ கணேச ம.வி.) |
| **நெறியாளர் குழு உறுப்பினர்** | : | **திரு.ஆ.பொன்னம்பலம்** *J.P.* |

**சங்கத்தின் தொழிற்பாடுகள்:**

1. மொத்த விற்பனை நிலையம் - 02
2. சில்லறை விற்பனை நிலையம் - 06
3. நிவாரணம் வழங்கல் நிலையம் - 06
4. கிராமிய வங்கி - 01
5. போக்குவரத்துத்துறை.
   I) தரைவழி லொறி, உழவு இயந்திரம் (இருசக்கரம்)
   II) நீர்வழி (கடல்) படகு சேவை.

சங்கத்தினை பாரம் ஏற்ற வேளை சங்க லொறி அச்சுவேலி முகாமில் பாதுகாப்புப் படையினரிடம் நான்கு முன்பக்க பின்பக்க சில்லுகள் அனைத்தும் கழட்டப்பட்ட நிலையும் மற்றும் முக்கிய உதிரிப்பாகங்கள் கழட்டப்பட்ட நிலையும் கொண்டதாக கட்டையில் ஏற்றப்பட்ட நிலையில் ஒரு வருடகாலமாக இருந்தது. எமது லொறிக்குரிய முக்கிய ஆவணங்கள் எம்மிடம் இல்லாததினால் யாழ்.அரசாங்க அதிபர் K.சண்முகநாதன் அவர்களின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் பலமுறை சம்பந்தப்பட்ட தரப்புடன் பேச்சுக்கள் நடாத்தி லொறி மீட்கப்பட்டது. பின்னர் உடனடியாக 5 லட்சம் ரூபா செலவில் திருத்தப்பட்டு புதிய வாகனமாக மெருகூட்டப்பட்டு சேவையில் ஈடுபட்டுவருகின்றது.

**கடல் வழி படகுசேவை:**

புங்குடுதீவுப் பகுதியில் எமது சங்கம் இயங்கியபோது நயினாதீவுக்கு என ஒரு சங்கம் இயங்கி வந்தது. புங்குடுதீவுச் சங்கம் இடம்பெயர்ந்தபோது கைவிடப்பட்டு வந்த ஓடிக்கொண்டிருந்த "சென்தாரகை" படகினை இயங்க முடியாதவாறு திருத்தப்படாமல் கட்டப்பட்ட நிலையில் நயினாதீவு இறங்குதுறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. நயினாதீவு சங்கத்தை புங்குடுதீவுச் சங்கத்துடன் இணைத்த உடன் எமது காலப்பகுதியில் U.N.H.C.R நிறுவனத்திடம் இருந்து பெரும் முயற்சி செய்து ரூபா 5 இலட்சம் நன்கொடையாகப் பெறப்பட்டு இப்படகின் அடிப்பாகத்தில் உள்ள அனைத்துப் பாகங்கள் (ஏரா) உட்பட புதிதாக மாற்றப்பட்டு இயந்திரப்பகுதிகளும் திருத்தப்பட்டு புதிய வர்ணம் அடிக்கப்பட்டு U.N.H.C.R நிறுவன யாழ். வதிவிட பிரதிநிதியினால் வெள்ளோட்டம் விடப்பட்டது. அப்படகு இன்று வரையும் இலாபகரமாக சேவையில் ஈடுபடுகின்றது.

யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் அவர்களின் சிபார்சின் பெயரில் இரு சக்கர உழவு இயந்திரம் வழங்கப்பட்டு சங்கத்தின் தேவையை நிறைவேற்றுவதுடன் உள்ளூர் மக்களின் தேவைகளையும் திருப்திகரமாக நிறைவேற்றி வருகின்றது.

**சங்க நிதி நிலை:**

நாங்கள் சங்கத்தைப் பொறுப்பேற்ற காலத்தில் சங்கத்தின் நிதி நிலைமை மிக மோசமான நிலையிலே இருந்தது. இடப்பெயர்வு காரணமாக சங்கத்தின் மூலதனம் பொருளாகவோ, பணமாகவோ, நாங்கள் சங்கத்தைப் பொறுப்பேற்ற காலத்தில் இல்லை என்பது முக்கியமாக குறிப்பிடத்தக்கதாகும். 1996ஆம் ஆண்டு நாங்கள் பதவியேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலிருந்து செய்துவருகின்ற ஒப்பந்தங்களினாலும் நுகர்ச்சி முதலான வியாபாரங்களினாலும் படகு, இரு சக்கர உழவு இயந்திரம், பொது ஊர்தி (லொறி) முதலியவற்றின் உழைப்பின் மூலம் கிடைக்கும் ஊதியத்தினாலும் சங்கமின்று சொந்தக்காலில் நின்று தொழிற்படுமளவிற்கு வளர்ந்து வருகின்றதை அறிவீர்கள்.

**நிலையான வைப்புக்கள்:**

1. கிராமிய வங்கியின் நிலையான வைப்பிலிருந்து (வாடிக்கையாளரின்) மொத்தம் 10 நிலையானவைப்பு "48 லட்சம்" ரூபாவும்.

2. கிராமிய வங்கிகளின் சமாசத்தில் 1/2 லட்சம் ரூபாவும் நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது.

3. மக்கள் வங்கியில் சங்கத்தின் லாபத்தால் பெறப்பட்ட பணமாக 16 லட்சம் ரூபா நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது.

**செய்யப்பட்ட ஒப்பந்தங்கள்:**

வேலணை பிரதேசசபை முதல் முதல் செய்யப்பட்ட ஒப்பந்தம்:

1. புங்குடுதீவு சவேரியார் கோயில் வீதி திருத்தமும் புங்குடுதீவு சந்தையடி வீதி திருத்தமும்.

2. நயினாதீவு இறங்குதுறை புனரமைக்கும் திருத்த வேலை கட்டிட திணைக்களத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தம்.

3. நயினாதீவு அரசினர் வைத்தியசாலை கட்டிட திருத்த வேலை.

4. நயினாதீவு வைத்தியசாலை நீர் விநியோக திருத்த வேலை.

5. நயினாதீவு இறங்கு துறையில் இருந்து பன்சாலை வரையிலான வீதிகளுக்கு திருத்த வேலைக்குரிய பொருள்கள் வழங்கியமை.

6. நயினாதீவில் புதிதாக கிணறு வெட்டிக் கொடுத்தமையும் குறுக்கு வீதி செப்பனிடப்பட்டமையும்.

7. புங்குடுதீவில் மீன் சந்தை கட்டிடம் புதிதாகக் கட்டி முடித்தமை.

08. புங்குடுதீவில் "கொல்களம்" கட்டிக் கொடுத்தமை.

09. புங்குடுதீவில் "சண்ஸ்ரார்" சனசமூக நிலையம் புதிதாக கட்டிமுடிக்கப்பட்டது.

10. வேலணை, புங்குடுதீவு பிரதேசசபை உப அலுவலகம் திருத்த வேலை செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளமை.

11. "நசரேற்" சனசமூக நிலையம் குறை வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டமை.

12. புங்குடுதீவு போக்கத்தை வீதி திருத்தியமை.

13. புங்குடுதீவில் உள்ள மக்கள் பாவனைக்குரிய ஆறு கிணறுகள் திருத்தப்பட்டு துப்பரவு செய்யப்பட்டமை.

14. நயினாதீவில் இருந்து தபால் சேவையினை நடத்துவதற்கு தபாற் பகுதியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம்.

**நிவாரண விநியோகம்:**

1996ஆம் ஆண்டு ஆனி மாதத்திலிருந்து யாழ்.அரசாங்க செயலகத்தினால் வழங்கப்படும் நிவாரணப் பொருள்களை எடுத்துவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு - நயினாதீவு தீவக மக்களுக்கு விநியோகித்து வருகின்றோம். இதற்கான சேவைக் கட்டணம் அரசின் மூலம் எமக்கு கிடைப்பதனால் ஓரளவு லாபமும் பெறப்படு கின்றது.

**ஆளணி:**

1. 01.06.1996 பணியாளரின் நிலை - 12.

2. 1996 - 2001 வரை பதவியில் இருப்பவர் கள் நிலை - 14.

3. நாட் சம்பளத்திற்கு வேலை செய்வோர் நிலை - 01.

4. எமது காலப்பகுதியில் புதிதாக அமைய அடிப்படையில் நியமனம் பெற்றோர் நிலை - 1

5. இராஜினாமா செய்தவர்கள் நிலை - 2.

**பணியாளர் கொடுப்பனவுகள்:**

பணியாளர்களின் சம்பளம் மாதாந்தம் வழங்கப்படுவதுடன் அவர்களுடைய சேம லாப நிதி (E.P.F) முறைப்படி கொழும்புக்கு வங்கியூடாக அனுப்பப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**இருசக்கர உழவு இயந்திரம்:**

மேலும் மேற்படி பாராளுமன்ற உறுப்பின ரின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து யாழ்.செயலக அரசாங்க அதிபர் திரு.க.சண்முகநாதன் அவர்களின் சிபார்சின்படி 231700 /- ரூபா பெறுமதியான புத்தம் புதிய "குபேட்டா" இரண்டு சக்கர உழவு இயந்திரமும் எமக்கு வழங்கப்பட்டது.

**பொது ஊர்தி (லொறி)**

1996ஆம் ஆண்டிலிருந்து பாதுகாப்புப் படையினரிடமிருந்து எமது சங்க 28-1039 இலக்கப் பொது ஊர்தியை எத்தனையோ சிரமத்தின் மத்தியில் அச்சுவேலி முகாமிலி ருந்து பொறுப்பேற்று ரூபா 4 லட்சம் வரை செலவு செய்து புனரமைப்புச்செய்து சேவை யிலீடுபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மதிப்பிழிவு நீக்கி குறைந்தது 30,000 /- ரூபாவை மாதவருமானமாகப் பெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக தனி யான கணக்கொன்றும் திறக்கப்பட்டுள்ளது.

1. கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிச் செய லாளர் நாயகமுமான திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் ஒரு லொறி யும், புவுசரும் தரும்படி கேட்டுள்ளோம். மிகவிரைவில் அதனைப் பெற்றுத்தருவ தாக உறுதியளித்துள்ளார்.

**வெளிநாட்டு நிறுவனங்களின் உதவிகள்:**

1. 1998இல் UNHCR நிறுவனத்திடமிருந்து ரூபா 5லட்சம் பெறப்பட்டு செந்தாரகை படகு ஏரா உட்பட படகின் முழுவதும் திருத்தம் செய்யப்பட்டது. ஓடமுடியாத நிலையில் கட்டப்பட்டிருந்த படகு மீண்டும் புதுப் பொலிவுடன் செந்தாரகை சேவை யில் ஈடுபட்டுவருகின்றது. சங்க சேவை யுடன் நயினாதீவு மக்களுக்கு சிறந்த போக்குவரத்து சேவையையும், தபால் சேவையையும் இப்படகு செய்து வரு வது குறிப்பிடத்தக்கதாகும்.

2. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்ட UNDP நிறுவனத்தாரின் உதவி யில் எமது கிராமிய வங்கி மூலம் சிறு கைத்தொழில், வியாபாரம், விலங்கு வேளாண்மை, கடற்றொழில் ஆகியன வற்றிற்கு குறைந்தது 10,000/- ரூபாவும், ஆகக்கூடியது 50,000/- ரூபாவுமாக சுழற்சி முறைக்கடன் 18% (சதவீத) வட்டியுடன் வழங்கப்படுகின்றது. இதில் புங்குடுதீவு, நயினாதீவு மக்கள் நன்மை அடைவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் சங்கத்தின் கிராமிய வங்கிக்கு வட்டி லாபமாக 1 லட்சத்திற்கு மேல் கிடைக்கின்றதும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்தும் விண்ணப்பங்களுக்கு கடன்கள் பரிசீலிக்கப்பட்டு பணிப்பாளர் சபையினால் அனுமதியளிக்கப்பட்டுவருவது குறிப்பிடத் தக்கதாகும்.

**முகவர் நியமனம்:**

1. 1997ஆம் ஆண்டு முதல் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விற்பனை முகவராகக் கூட்டுத் தலைமையகத்திடமிருந்து அனுமதிபெற்று எரிபொருள், மண்ணெய், டீசல் பெற்று புங்குடுதீவு, நயினாதீவு மக்களுக்கு விநியோகம் செய்து வருகின்றோம்.
2. புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலைய தாங்கி ஒட்டப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட முகவரினால் இது திருத்தப்பட்டுவர ஏற்பாடு செய்து தரப்படுகின்றது.

**தொலைத்தொடர்பு இணைப்பு:**

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பொதுமக்களின் பாவனைக்கு என தொலைபேசி ஒன்று அவசரமும் அவசியமும் என்பதினால் யாழ்.தொலைத் தொடர்பு திணைக்களத்திடம் எமது விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு "நான்" அலுவலக அனுமதியும் பாதுகாப்பு அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளது. யாழ்.மத்திய பரிவர்த்தனை நிலைய அதிகாரிகளுடன் இது விசயமாக பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றோம். யாழ்.அரச அதிபரும் இதற்கு சிபார்சு செய்து ஒத்துழைப்பு வழங்கியும் உள்ளது. குறிப்பிடத் தக்கதாகும். கூடிய விரைவில் இணைப்பு வழங்கப்படலாமென எதிர் பார்க்கின்றோம்.

**சேவைகள்:**

1. புங்குடுதீவு இறுப்பிட்டி மக்களின் நன்மை கருதி அவர்களின் கோரிக்கையை ஏற்று அங்கு ஓர் கிளையை நிறுவி சேவை செய்துவர முடிவு செய்யப்பட்டுள்ளது. கிளை திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றது.
2. என்றுமில்லாதவாறு கடந்த 1998, 1999, 2000, 2001 ஆண்டுகளுக்குரிய கலண்டர்கள் அச்சிட்டு அங்கத்தவர்களுக்கு, ஊழியர்களுக்கு அன்பளிப்புச் செய்துள்ளோம்.
3. தொலைத் தொடர்பு இணைப்பு - இதற்குரிய அனுமதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. கூடிய விரைவில் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
4. எரிபொருள் நிரப்பு நிலையம் திருத்தப்பட்டுவருகின்றது. அடுத்த மாதம் அளவில் முழுமையாக இயங்கவிருக்கின்றது.
5. தீவகத்திலுள்ள புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை, ஊர்காவற்றுறை அடங்கிய பாடசாலைகள் சனசமூக நிலையங்கள், ஆலயங்களுக்கு எம்மால் முடிந்தளவு உதவிகள் அவ்வப்போது வழங்கி வருகின்றோம். இவர்களது விண்ணப்பங்களை பணிப்பாளர் சபையினால் பரிசீலிக்கப்பட்டே வழங்கப்படுகின்றது குறிப்பிடத்தக்கது.
6. நயினாதீவுப் பகுதி மக்களுக்காக தபால் சேவையை எமது சங்கம் பொறுப்பெடுத்து சேவையை வழங்கி வருகின்றது.
7. கிராமிய வங்கியூடாக புங்குடுதீவு - நயினாதீவு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு உரிய காலத்தில் அவர்களது ஓய்வூதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம் வழங்கி வருகின்றோம். அதிலும் நயினாதீவு மக்களுக்கு நயினாதீவிலேயே ஓய்வூதியம் பெற ஏற்பாடுகள் செய்து, பெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கது.

**ஏனைய சங்கங்களின் அங்கத்துவம்:**

1. எமது காலப்பகுதியில் யாழ்.மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளோம். மேற்படி சமாசத்தில் அங்கத்துவம் பெற்றதின் பயனாக சமாசத்தினால் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தருவிக்கப்படும் பொருட்களை வெளிச்சந்தையைவிட மலிவாக கொள்வனவு செய்து எமது மக்களுக்கு நியாய விலைக்கு விற்க முடிகின்றது.

2. யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபைக்கு கூட்டுறவு நிதியாக வருடாவருடம் ரூபா 12000/- செலுத்தி வருகின்றோம்.

3. கிராமிய வங்கிகள் சமாசத்தில் ரூபா 2000/- செலுத்தி அங்கத்துவம் பெற்றுள்ளோம்.

**கூட்டுறவுப் பயிற்சி நெறிகள்:**

எமது காலப்பகுதியில் யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக்கு எமது பொது முகாமையாளர் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு சித்தியடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இனிவரும் காலப்பகுதியிலும் பணியாளர்களை பயிற்சிக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

**எண்பார்வை:**

1996ஆம் ஆண்டிலிருந்து 1997, 1998, 1999, 2000ஆம் ஆண்டுக்குரிய எண்பார்வைகள் நடைபெற்று முடிந்துள்ளன. 2000/2001 இற்கான எண்பார்வை நடைபெற ஒழுங்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கூட்டுறவு உதவி ஆணையாளர் அவர்களது ஒத்துழைப்பினால் இவ் எண்பார்வை நடைபெறக்கூடியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**தலைவருக்கான கொடுப்பனவு (அலவன்ஸ்)**

1996ம் ஆண்டிலிருந்த 1999ஆம் ஆண்டு வரை ரூபா 500 மட்டுமே மாதாந்த தலைவருக்கான படியாகப் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**அடுத்தகட்ட நடவடிக்கைகள்:**

எமது சங்கத்தின் களஞ்சியப் பகுதிகள் மக்கள்கடை, கிராமியவங்கி என்பன மழைக் காலங்களில் ஒழுக்குகள் ஏற்பட்டு பாவனைக்குரிய இடமாகக் காணப்படாமல் பெரிதும் சிரமப்பட்டோம். இதனால் எமது இயக்குநர்சபை மேல்மாடி ஒன்று அமைப்பதற்கு கூட்டுறவு ஆணையாளரிடம் அனுமதிபெற்று அதன் கட்டிடப்பணிகளை ஆரம்பித்து முடித்துள்ளது. இதனால் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டங்களைக் கூட நடாத்த இடம் அற்று பாடசாலைகளில் நடாத்தி வந்த நிலைமை மாறி சங்கத்தின் கட்டிடத்திலேயே நடாத்த வழி பிறந்ததுடன் சங்கத்தின் காரியாலயத் தேவைகட்கும் இந்த மாடிக்கட்டிடம் பயன்படுத்தக்கூடிய விதத்தில் மிக அழகாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. *

**நன்றிகள்**

நாம் சங்க நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற காலத்தில் சங்கத்தில் நிதி, ரூபா காசுகூட விற்பனைக்குப் பொருள்கள் வாங்கக்கூட அற்றநிலை. யாழ்.அரசாங்க அதிபர் திரு.க. சண்முகநாதன் அவர்கள் அன்றைய காலத்தில் தீவக மேலதிக அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் அவரால் ரூபா 5 இலட்சம் பெறுமதியான பொருள்கள் எமக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து எமக்கு நிதியுதவி செய்த வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நிறுவனங்களான UNHCR, UNDP நிறுவனங்களுக்கும், தொடர்ந்து பல சேவை களை எமக்கு நல்கிவரும் எம் தீவக அர சாங்க அதிபர் திரு.க.இரத்தினம் அவர்களுக் கும், பற்பல வழிகளில் எமக்குதவியவரும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரு மான திரு.J.X.செல்வநாயகம் அவர்களுக்கும் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு அரும்பாடுபடுபவரும் குறிப்பாக எமது சங்க வளர்ச்சிக்கான தொழில் அபி விருத்திகளைப் பெருக்க பற்பல நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு அறிவுரைகள் கூறியும் சங்க முன்னேற்றத்திற்கான நிதி யுதவிகளை வழங்கியவரும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருமான உயர்திரு.க.சண்முக நாதன் அவர்கட்கும், தற்பொழுது கட்டப் பட்டு திறக்கப்படும் கட்டிடத்திற்குரிய நிதி யுதவியை வழங்க முன்வந்திருக்கும் ஈழமக் கள் ஜனநாயகக்கட்சி செயலாளர் நாயக மும் அமைச்சருமான கௌரவ கே.என்டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் தீவகப் பொறுப் பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப் பினருமாகிய (மனோ) ந.மதனராசா அவர் களுக்கும் வேலணை பிரதேசசபைத் தலை வர் திரு.நா.கருணாகரமூர்த்தி அவர்களுக் கும், எமது சங்கம் கடமைப்பாடுடையதோடு அவர்கள் யாவருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தவிர இச்சங்கம் இன்று தனது சொந்தக் காலில் நின்று வளர வளர்ச்சியடைய தனது திறமையினால் திறம்பட நிர்வாகத்தை இயக் கிய சங்கப் பொது முகாமையாளர் செல்வி எ.செல்வவதனா அவர்களுக்கும், இச்சங் கத்தை இந்நிலைக்கு உயர்த்த என்னோடு முன்னின்று உழைத்த உபதலைவர் திரு. S.K.சண்முகலிங்கம் (அதிபர், யாழ்.புங்குடு தீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்) அவர் களுக்கும் நெறியாளர் குழு உறுப்பினரும் சமாதான நீதிவானுமாகிய திரு.ஆ.பொன்னம் பலம் அவர்களுக்கும், பொதுச்சபை உறுப் பினரும் சங்கத்தின் சங்கமட்டப் பணியாளர் கட்கும் நாம் சரியானதைச் செய்யவேண்டு மென வழிநடாத்திய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.செ.கு.சண்முக நாதன் அவர்களுக்கும், மற்றும் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

*

**நன்றி.**

**தலைவர்:**

**லயன் டாக்டர் க. இராஜரெட்ணம் J.P**

**உபதலைவர்:**

**லயன் S.K.சண்முகலிங்கம்**

(அதிபர் - யாழ். புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்)

**நெறியாளர் குழு உறுப்பினர்:**

**திரு. ஆ. பொன்னம்பலம் J.P**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**செ.சு.செல்வவதனா**

**பதில் பொது முகாமையாளர்.**

**புங்-நயி. ப.நோ.கூ.சங்கம்**

சங்கங்களின் ஆரம்பகால வளர்ச்சியானது நுகர்வோர் கூட்டுறவு சங்கமாக ஐக்கிய நாணய சங்க பண்டகசாலைகளாக மாற்றமடைந்து இறுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாக உருவமடைந்தது. இதேபோன்று எமது கிராமத்திலும் வளர்ச்சி அடைந்த சங்கமானது புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாக மிளிர்ந்துள்ளது. 1971ஆம் ஆண்டு காலப்பகுதியில் தீவுப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமாக இருந்து வந்ததின் பின்னர் 21.03.77இல் புனரமைப்புச்செய்யப்பட்டு புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாக பெயர் பெற்றது. இக்காலப்பகுதியில் புங்குடுதீவில் 16 நுகர்ச்சிக் கிளைகளையும் நயினாதீவில் 03 நுகர்ச்சி கிளைகளையும், எரிபொருள் நிரப்பு நிலையம் 01, கிராமிய வங்கி 01 மொ.கிளை 02ஆக இயங்கிவந்தது. பின்னர் கிளைகள் விஸ்தரிக்கப்பட்டு பிடவை, கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம், குறிகாட்டுவான், நயினாதீவு பயணிகள் படகுச் சேவை பவுசர் மூலம் குடிநீர் விநியோகம் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டது.

1991ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதப் பகுதியில் தீவுப்பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின் காரணமாக புங்குடுதீவு மக்களும், சங்கமும் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. நயினாதீவு பகுதி இடம்பெயராத காரணத்தால் அவர்கள் அங்கு வாழ்ந்து வந்துள்ளார்கள். புங்குடுதீவில் இடம் பெயராத சில குடும்பங்கள் இங்கு இருந்தன. புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் பகுதிகளை உள்ளடக்கி தீவுப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் பதிவு செய்யப்பட்டு இயங்கி வந்தது. இதன் பொது முகாமையாளராக திரு.சி.முத்துவேலு அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். இக்கால கட்டத்தில் தீவுப்பகுதிக்கும் திருகோணமலைக்குமான கப்பல் சேவை நடைமுறைப்படுத்தப்பட்டது. மக்களுக்குத் தேவையான பொருள்கள் திருகோணமலையில் இருந்து கொண்டுவரப்பட்டு இலவச உலர் உணவுப் பொருள்களாகவும், ரொக்க விற்பனைகளாகவும் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவுப் பகுதி இடம்பெயர்ந்த காரணத்தால் நயினாதீவுப் பகுதி பிரிவுபட்டுள்ளது. இக்காலத்தில் அங்கு உள்ள பணியாளர்களையும், நுகர்ச்சிப் பொருட்களையும், நிதியையும் கொண்டு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் புதிதாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் பதியப்பட்டு இயங்கி வந்தது. இச் சங்கத்தின் மூலம் இங்குள்ள மக்களுக்கு இலவச உலர்உணவுப் பொருள்கள், ரொக்க விற்பனை மேற்கொள்ளப்பட்டு வந்தது. இத தலைவராக திரு. அவர்களும், பொது முகாமையாளராக திரு.பொ.நடராசா அவர்களும் கடமையாற்றி வந்தனர்.

இதே காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அங்கு தலைமைக் காரியாலயம், மொ.கிளைகள், கிளைகள், கிராமியவங்கி ஆகியவற்றை அமைத்து புங்குடுதீவுப் பகுதி மக்களுக்குத் தேவையான இலவச உலர்உணவுப் பொருள்கள் விநியோகம், ரொக்க விற்பனை என்பனவற்றைச் செய்து வந்தது. கொழும்பில் இருந்து பொருள்கள் கொண்டுவரப்பட்டு மொத்த சில்லறை விற்பனைகள் செய்யப்பட்டது. 60 பணியாளர்கள் வரை கடமையாற்றி வந்தனர். மானிப்பாய் வீதி, ஜிம்மா பள்ளிவாசல் வீதி, கே.கே.எஸ். வீதி, ஆகிய இடங்களில் கிளைகள் அமைக்கப்பட்டு பொருள்கள் விநியோகம் மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்தது. சங்கத்தின் செயற்பாடுகள் நல்ல நிலையில் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இக்காலத்தில் வங்கியில் நிலையான வைப்பில் முதலீடு 300,000/-ம் கோண்டாவில் பகுதியில் களஞ்சியம் அமைப்பதற்கு ஒரு வீடு 12,50,000/- வில் வளங்கப்பட்டது. இரண்டு லொறிகள் கொள்வனவு செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. தலைவர் திரு.ப.கணேச லிங்கம் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட நெறியாளர் குழுவின் ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் யாழ்.குடாநாட்டிலிருந்து மக்கள் இடம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் மக்களும், சங்கங்களும் இடம்பெயர்ந்து தென்மாராட்சிப் பகுதியிலும், வடமராட்சி பகுதி, வன்னிப்பகுதிக்கும் சென்று தமது இருப்பிடங்களை அமைத்துக் கொண்டன. எமது சங்கமும் தென்மராட்சியின் சாவகச்சேரியில் தலைமைக் காரியாலயம், கிளைகள் மற்றும் மட்டுவில், தச்சன்தோப்பு, கெற்பேலி, வரணி, மீசாலை, பளை ஆகிய இடங்களிலும் நுகர்ச்சி விற்பனைக் கிளைகளை அமைத்து அதன் மூலம் இலவச உலர் உணவு விநியோகம் ரொக்க விற்பனை ஆகியவற்றைச் செய்து வந்தது. அத்துடன் வன்னிப் பகுதியில் முழங்காவில் என்ற இடத்தில் ஆரம்ப கிளையையும் ஆரம்பித்து ஒரு பகுதி அங்கும் செயற்பட்டு வந்தது. இவ்வாறு சங்கத்தின் செயற்பாடுகள் நடைபெற்று வந்தபோது மீண்டும் 1996 ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் யாழ்.குடாநாட்டை நோக்கி மக்கள் திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் ஒரு பகுதி மக்கள் வன்னிப் பிரதேசத்தை நோக்கியும் சென்றார்கள். சங்கத்தின் ஒரு பகுதி யாழ்ப்பாணத்தை நோக்கியும், மறு பகுதி வன்னிப் பிரதேசத்தை நோக்கியும் செல்ல வேண்டியநிலை ஏற்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கையின்போது சங்கத்தின் நுகர்ச்சிப் பகுதிச் சொத்துக்கள் அத்தனையும் மீட்டு எடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கைவிட்டுள்ளோம். வன்னிப்பிரதேசம் சென்ற மக்களின் நலன்களை பேணும் நோக்குடன் அங்கு சென்ற சங்கப் பணியாளர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று சேர்த்து கிளை "புங்குடுதீவு - நயினா தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்" என்ற பெயரில் சங்கத்தைப் பதிவுசெய்து இயங்கி வருவதுடன் இச் சங்கத்துடன் இணைந்த மக்களின் இலவச உலர்உணவு விநியோகம், நுகர்ச்சிப்பொருள் விற்பனை ஆகியவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இங்கு சங்கத்தின் சேவை அளப்பரியதாகும்.

யாழ்.குடாநாட்டை நோக்கிச் சென்ற மக்கள் மீளவும் தமது பிரதேசங்களில் குடி அமர்ந்தனர். எமது தீவுப்பகுதிக்கும், மக்கள் சென்று குடியமரக் கூடிய நிலை ஏற்பட்டது. இதனால் புங்குடுதீவிலும் மக்கள் மீளக்குடி யமர்ந்தார்கள். ஏற்கனவே அங்கிருந்த குடும் பங்களுடன் சேர்ந்து 330 குடும்பங்கள் உண் டாகியது. அக்காலப்பகுதியில் கூட்டுறவு திணைக்களத்தின் கடமைகள் யாவும் பிர தேச செயலகத்தின் பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கி வந்தது. அதன்படி வேலணை பிரதேச செயலகத்தின் அனுமதியின் பேரில் புங்குடுதீவில் எமது சங்கம் மீளவும் 01.06. 1996ல் இயங்க ஆரம்பித்து அப்போதுள்ள பணியாளர்களைக் கொண்டும் சங்கத்தின் மூன்று நெறியாளர்களையும் சேர்த்து சங்கச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. தென் மராட்சிப் பகுதியில் சங்கச் சொத்துக்களை இழக்க நேரிட்டதால் மீளச் சங்கத்தை இயக் குவதற்கு பொருள்கள் இல்லாது கஷ்டப் பட்டோம். அச்சந்தர்ப்பத்தில் அரசாங்க அதி பர் திரு.க.சண்முகநாதன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு.J.X.செல்வ நாயகம் ஆகியோரின் உதவியினால் ரூபா 400,000/- பெறுமதியான நுகர்ச்சி பொருள்கள் எமக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இவர் களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை செலுத்த கடமைப்பட்டவர்களாக உள்ளோம். ஏற்கனவே நுகர்ச்சித் தேவைகளாக எடுக் கப்பட்ட மேலதிகப்பற்றுகளையும் சீர்செய்து மக்கள் வங்கி, பிரதான வீதிக் கிளை, யாழ்ப்பாணத்தில் 130,000/-வை நிலையான வைப்பிலிட்டோம். இக்காலத்தில் வேலணை பிரதேச செயலராக கடமையாற்றிய திரு. நா.தியாகராசா அவர்களின் ஒத்துழைப்பும், அனுசரணையும் சங்க வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வந்தது. இவருக் கும் எமது நன்றிகள்.

சங்கத்தின் சேவையில் ஈடுபட்டு வந்த லொறி சாரதி இல்லாமையால் தென்மராட்சி யில் கைவிடப்பட்டு மீளப்பெறமுடியாத நிலை ஏற்பட்டது. இதனை இராணுவத்தினர் எடுத்து பாவனையில் ஈடுபடுத்தி பழுது அடைந்த காரணத்தால் அச்சுவேலி இராணுவ முகா மில் வைத்திருந்தார்கள்.

1997ஆம் ஆன்டு மார்கழி மாதம் லொறி மீளவும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனை திருத்தம் செய்து பாவித்து வருகின்றோம். இதே காலத்தில் நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் குலைக்கப்பட்டு அங் குள்ள நுகர்ச்சிப் பொருள்களும், பணியாளர் களும் எம்மிடம் வழங்கப்பட்டன. செந்தா ரகை படகு பழுதடைந்த நிலையில் உள்ளது. திருத்தம் செய்யப்பட்டு சேவையில் ஈடு படுகின்றது. குறிகட்டுவான், நயினாதீவிற் கான சேவையில் ஈடுபடும் பயணிகள் படகை திருத்தம் செய்வதற்கு ஏற்பட்ட செலவில் ஒரு பகுதியாக 499,000/- யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினால் அன்பளிப்பாக வழங்கப் பட்டது. இந்நிதியை பெற்றுத்தருவதற்கு உதவி புரிந்த வேலணை பிரதேச செயலர் திரு.செ.இரத்தினம், உதவி திட்டமிடல் உத்தியோகத்தர் திரு.த.தெட்சணாமூர்த்தி, இப்பகுதி சார்ந்த தொழில்நுட்பம் உத்தி யோகத்தர், ஏனைய ஊழியர்களின் அயராத ஒத்துழைப்பும் எமக்கு கிடைத்த அளப்பரிய கொடையாகும். இவர்களுக்கு எமது நன்றி கள் உரித்தாகுக. அரசாங்க அதிபரின் முயற் சியால் மூன்றுசில்லு உழவு இயந்திரம் ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.06.1996ல் ஆரம்பிக்கப்பட்ட சங்கத்தின் கணக்காய்வு 96 / 97 / 97 / 98 / 98 / 99 / 99 / 2000ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு திணைக்களத்தினால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. இச் சங்கத்தினர் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வரும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி) அதிபர் (கணக்காய்வு), சங்கத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், திணைக்களப் பணியாளர்கள் யாவருக்கும் நாம் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

அடுத்து யு.என்.டி.பி. நிறுவனத்தால் சுய தொழில் முயற்சி கடன் திட்டத்திற்கு என சங்கத்திற்கு 10,00,00/- வழங்கப்பட்டுள்ளது. இதனை புங்குடுதீவு, நயினாதீவு எல்லைப் பரப்பில் உள்ள மக்களின் சுய தொழில் முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கியுள்ளோம். இக் கடன் திட்டத்தின் மூலம் விவசாயம் செய்பவர்கள், வியாபாரத்தை விருத்தி செய்வோர், சிறு கைத்தொழில் முயற்சியில் ஈடுபடுவோர்கள் ஆகியோர் பயன் அடைந்து விடுகின்றார்கள். இந்நடைமுறையை மேற்பார்வை செய்து ஆலோசனை வழங்கிவரும் சிரேஷ்ட திரு.கனகசபை, அவர்களுடன் இணைந்து செயற்பட்டுவரும் உத்தியோகத்தர்கட்கும் நன்றிகள்.

செயலக புனர்வாழ்வுப்பகுதி திட்டப் பணிப்பாளர், உதவித் திட்டப்பணிப்பாளர், இவை சார்ந்த பணியாளர்களின் ஒத்துழைப்புக்கும் எமது நன்றிகள். சங்கத்தின் நிதி பிரச்சினைகளுக்கு எப்போதும் உறுதுணையாக இருந்து வரும் மக்கள் வங்கி பிரதான வீதிக் கிளை, யாழ்ப்பாணத்தின் முகாமையாளர், ஏனைய பணியாளர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாத ஒன்றாகும். தொடர்ந்து வரும் காலங்களிலும் இவர்களின் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுவதுடன் நன்றிகளும் உரித்தாகுக.

சங்கத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் பிரதேசசபையின் ஒப்பந்த வேலைகள் சில எம்மால் செய்யப்பட்டன அவற்றிற்கு உதவி புரிந்த பிரதேசசபை பணியாளர்களின் உதவிகளுக்கு என்றும் நன்றிகள்.

சங்கம் ஆரம்பித்த காலம் தொடங்கி இனிது வரை தலைவர்களாகவும், நெறியாளர்களாகவும் இருந்து தமது முழு நேர சேவையை ஆற்றி வந்தவர்களுக்கு சங்கம் என்றென்றும் கடமைப்பாடு உடையதாகின்றது. அதேபோன்று பொதுமுகாமையாளராக கடமையாற்றி வந்துள்ள திரு.த.பசுபதிப்பிள்ளை, திரு.வே.செல்லத்துரை, திரு.மு.சச்சிதானந்தன், திரு.செ.கனகசபாபதி, திரு.சி.முத்துவேலு அவர்களின் வரிசையில் எனது பணியும் தொடர்கின்றது. கடந்த சாதாரண, அசாதாரண சூழ்நிலைகளில் என்னுடன் பணியாற்றி வந்த சகல பணியாளர்கட்கும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வந்த தலைவர்கள், நெறியாளர்சபை உறுப்பினர்கட்கும் எனது மனமார்ந்த நன்றிகளை என்றும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

**"கூட்டுறவே நாட்டுயர்வு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவே நாட்டின் உயர்வு

நானில மண்ணில் உயர்
நலம் வேண்டி மக்கள்
குறிஞ்சியும் மருதமும் தேடி
குடி வாழ்ந்த காலம்
கூட்டுறவு என அக்காலத்தில்
குறித்து வழங்கப் பட்டது.
ஆதிகால மனிதனின்
அக்காலக் கொள்கைகள்
இன்றைய உலகில்
இணையற்ற விருட்சமாகி
கூட்டுறவின்றி மக்கள்
கூடி வாழ முடியாதென
அழகு தமிழில் ஆட்சி செய்யும் காலம்.
விண்வெளி சகாப்தம் முதல்
விவசாயம் வரை மானிடனின்
கூட்டுறவு முயற்சியே தினம்
குவலயத்தை ஆட்சி செய்கின்றது.
சீர் பூத்த புங்கையன் பதியில்
காடும் சிறு தானியங்களும்
கலந்தே வளம் கொழிக்கும்
விவசாய பூமியில் உன்னத
விருட்சமாய் காட்சி தரும்
நயினாதீவு புங்குடுதீவு புகழ்
நகரம் பலநோக்கு சங்கம்
மக்கள் குறை தீர்க்கவே
மலர்ச்சியுடன் ஆட்சி செய்யும்
அழகின் சிறப்பை அறிய
ஆயிரம் கண்கள் வேண்டும்
இணையற்ற தலைமைகள்
இனிமையான முகாமையாளர்கள்
பண்பான மக்கள் குழாம்
பாரின் சிறப்பை உயர்த்தி நிற்கும்
கூட்டுறவு என்ற நாமம்
கூடி ஒலிக்கும் புங்கை நகரில்.

கி. கிருஷ்ணகுமார்
ஆசிரியர், புங்குடுதீவு ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கூட்டுறவுத் தீபம்' மலருக்கு எமது
உளம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்

**இதோ! யாழ்.நகரில் ஒரு 'சுப்பர் மாக்கற்'**
**அதுதான் இல்லையெண்ணாமல் சுரக்கும் பல்பொருள் ஸ்தாபனம்**

**யுனி லிவர் கம்பனியால்** உற்பத்தி செய்யப்படும் சகல சோப், பவுடர் வகைகள்
**உபாலி பூட்,** பவறேஜஸ் உற்பத்திகளான கன்டோஸ் - டெல்ரா இனிப்பு வகைகள்
**லங்கா மில்க்பூட்** உற்பத்தியான லக்ஸ்பிறே பால்மா
**நெஷல்ஸ்** உற்பத்தியான நெஸ்ரமோல்ற், மைலோ என்பன
மற்றும் குழந்தைகள் பால்மா, செறியல்ஸ் உணவு வகைகள்
**சிலோன் ருபாக்கோ** உற்பத்தியான சிகரெட் வகைகள்
**டெல்மேஜ்** உற்பத்திகளான கோடியல்ஸ், ஜாம், ஜெலி கிறிஸ்ரல் வகை, **சூரியா மார்க்** தீப்பெட்டி
இன்னும் பற்பல சில்லறையாகவோ மொத்தமாகவோ பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# குகன் களஞ்சியம்




**180(380), ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.இல. 021.2027, 021.2993**

**'கூட்டுறவுத் தீபம்' இனிதே பிரகாசிக்க**
**எமது நல் வாழ்த்துக்கள்**

காத்திரமாகவே கடுத்திடும் இவ்வெய்யிலில் நேர்த்தியாகவே
சோர்விலாது நடந்திட, உங்கள் பாதங்களைக் காத்திடக் காத்திருக்கின்றன
**கபிலாவின் காலணிகள்**
★ **கபிலா** காலணி என்றால் உங்கள் வனப்பை மேலும் மிளிர வைக்கும் பிரத்தியேக பாதணி
★ நீங்கள் தேடிடும் பாதணிவகைகள் இம்மேதினியிலே பெற்றிட
நாடிட வேண்டியது **கபிலா**
**உங்களுக்காகவே, விதவிதமான உள்நாட்டு, வெளிநாட்டு காலணிகளைக்**
**கொழும்பிலிருந்து நேரடியாகத் தருவித்து விநியோகிப்பவர்கள்:**

**யாழ்.நகரில்**

# கபிலா காலணி அகம்

**இல.4, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.நகரில்
சகலவிதமான பாவனைப் பொருள்களையும்
தரமாக மலிவாக விற்பனை செய்பவர்கள்

# சித்திவிநாயகர் களஞ்சியம்

ஆஸ்பத்திரி வீதி, சத்திரத்துச்சந்தி,
யாழ்ப்பாணம்.

*உரிமையாளர்: க. நித்தியானந்தன்
புங்குடுதீவு.*

**மலர் சிறக்க வாழ்த்துகிறார்கள்**

புங்குடுதீவு மக்களுக்கு
சாய்ப்புச் சாமான்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருள்களை
விற்பனை செய்பவர்கள்

# அம்பாள் ஸ்ரோர்ஸ் அன்ட் ரெக்ஸ்ரைல்ஸ்

*உரிமையாளர்: ஸ்ரீகாந்தன்
புங்குடுதீவு.*

**மலர் சிறக்க வாழ்த்துகிறார்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் சேவை மகத்தானது
அதை உணர்ந்தோர்
புங்குடுதீவு – நயினாதீவு
ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தினர்

**விழாச் சிறக்க மலர் மணம் கமழ**
**எமது வாழ்த்துக்கள்**

அனலைதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அனலைதீவு.



'கூட்டுறவே நாட்டுயர்வு'
என்றனர் குவலயத்தோர்
அதனை
நிரூபித்துக் காட்டியவர்
புங்குடுதீவு – நயினாதீவு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர்

**இன்றைய நிகழ்ச்சிகள்**
**சிறக்க எமது வாழ்த்துக்கள்**

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தொண்டு என்பதோர் தெய்வப்பணி**
**கூட்டுறவுப் பணியும் அவ்வாறே**
**மண்டபம் கண்டு இன்று திறப்புவிழா**
**அதற்கோர் அணையாத் தீபம்**
**'கூட்டுறவுத் தீபம்'**

**புங்குடுதீவு – நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்**
**பணிகள் மேலும் சிறக்க எமது நல் வாழ்த்துக்கள்**

**நெடுந்தீவு ப.நோ.கூட்டுறவுச் சங்கம்,**
**நெடுந்தீவு.**

கூட்டுறவாளரின் "கூட்டுறவுத் தீபம்"
பிரகாசிக்க வாழ்த்துவோர்

# *Maaruthi Trading Centre*

# மாருதி ரேடிங் சென்ரர்

General Merchants and Commission Agents
16A, Stanley Road, Jaffna.
T.P. - 021-2932

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கூட்டுறவுத் தீபம்" என்றென்றும்
பிரகாசிக்க வாழ்த்துகிறோம்

# சிறீ சக்தி ஸ்ரோர்ஸ்

சகலவிதமான பிஸ்கட் வகைகள், இனிப்பு வகைகள் மற்றும்
பால்மா வகைகள் அனைத்தும்
தரமாகவும் நியாய விலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

# SRI SAKTHY STORES

**340A, Hospital Road,**
**Jaffna.**

"கூட்டுறவுத் தீபம்" இனிதே வெளிவர
எமது இனிய வாழ்த்துக்கள்

ஒரு குடும்பத்திற்குத் தேவையான
சகலவிதமான மளிகைப் பொருள்களையும், ஏனைய அரிசி வகைகள்,
பால்மா வகைகள் போன்றவற்றையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# BAGALON STORES

# பகலோன் ஸ்ரோர்ஸ்

**334, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கூட்டுறவு மலருக்கு சிவா நறுமணப் பூங்காவின்
நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

"கர கர மொரு மொரு"

**சன்வீட்டா பிஸ்கட்டுக்களை**

*தனிச் சிறப்புடன் சுவைத்து மகிழுங்கள்*

தயாரிப்பாளர்கள்:

**வெஸ்ரன் பூட்ஸ் (பிறைவேற்) லிமிட்டட் – கொழும்பு.**

சந்தைப் படுத்துவோர்:

**சிவா நறுமணப் பூங்கா**

**288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. இல. 2567.**

"கூட்டுறவு மலருக்கு" வேணி களஞ்சியத்தின்
நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

**வேணி களஞ்சியம்**

**165, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

மொத்த சில்லறை வாணிபம் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருட்களை
கொழும்பு கொண்டு சென்று சந்தைப்படுத்தித் தருபவர்கள்
வேணி ரான்ஸ்போட் ஸ்தாபனத்தார் என்பதை
நினைவில் வைத்திருங்கள்

தொலைபேசி இல. ~ 021.2661.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கூட்டுறவே நாட்டுயர்வு"
தற்கால நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ற
கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்

# ராஜ்குமார் ரேடர்ஸ்

மிட்சுபி, அட்லஸ் சீமெண்ட் வகைகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
விநியோகிப்போர்

# ராஜ்குமார் ரேடர்ஸ்

**11/8, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

கூட்டுறவாளரின் "கூட்டுறவுத் தீபம்"
பிரகாசிக்க வாழ்த்துவோர்

# GUBERAN KALANCIYAM

**யாழ்.நகரில்!**

சகலவிதமான பிஸ்கட் வகைகள்
கண்டோஸ் வகைகள், இனிப்பு வகைகள்
மற்றும் அழகுசாதனப் பொருள்கள் விற்பனையாளர்கள்

# குபேரன் களஞ்சியம்

**160, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவு மலர் மலர வாழ்த்துகிறோம்

இள நங்கையர்க்கு எப்பொழுதும் இளவரசியாக இருக்கவே விருப்பம் அதற்கேற்ப

**வர்ணங்கள் பல** **டிசைன்கள் பல**

என கவர்ந்திழுப்பது

# இளவரசி ரெக்ஸ்ரைல்

முகூர்த்தப் பட்டுப் புடவைகளா கண்கவர் சாறி வகைகளா பிளவுஸ் வகைகளா

எண்ணம்போல் தெரிவுசெய்யக் கூடிய ஒரே இடம்

சேலைகளின் சோலை பட்டுப்புடவைகளின் சாம்ராஜ்யம்

# இளவரசி ரெக்ஸ்ரைல்

**57, நவீன சந்தை (உட்புறம்),**

**யாழ்ப்பாணம். தொ.பே. - 2503.**



"கூட்டுறவே நாட்டுயர்வு"

# நியூ கல்யாணி நகை அகம்

**தங்கப்பவுண் வியாபாரம்**

**முதல்வர்: லயன் க.நித்தியானந்தன்**

புதுப்பொலிவு
தங்க ஆபரணங்களை
நிதானமாகப்
பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

22 கரட் தங்க நகைகள்
குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து
கொடுக்கப்பெறும்.

காலத்திற்கேற்ப எங்கள் கைவண்ண நுண்ணிய
அமைப்பு தங்க நகைகளுக்கு
எங்கள் ஸ்தாபனத்தை நாடுங்கள்.

# நியூ கல்யாணி நகை அகம்

**87, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**(வண்ணை சிவன் கோவிலுக்கு முன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கூட்டுறவே நாட்டுயர்வு"
"கூட்டுறவு தீபம்" சிறப்புடன் மலர
எம் வாழ்த்துக்கள்

# அம்பிகாபதி அழகு மாடம்

☆ பலவிதமான அழகுசாதனப் பொருள்கள்
☆ அன்பளிப்புப் பொருள்கள்
☆ நவநாகரிக விளையாட்டுப் பொருள்கள்
என்பனவற்றை நிதானமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

# Ambikapathy Fancy House

**9A, நவீன சந்தை - யாழ்ப்பாணம்.**

**T.P. : 021-2084**

"கூட்டுறவு தீபம்" ஏற்ற வாழ்த்துவோர்

# இ.ச. பேரம்பலம் சக நிறுவனம்

**50,52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**Telephone - 2988, Fax - 2386**

மிதிவண்டி, உதிரிப்பாக இறக்குமதியாளர்கள்
லோட்டஸ் மிதிவண்டி ரயர், ரியூப்புகளிற்கான ஏக விநியோகஸ்தர்கள்,
மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள்,
கலர் பிலிம் றோல், வீடியோ ஓடியோ கசற்கள்
மற்றும்
பல்பொருள் விற்பனையாளர்கள்.

உங்கள் தேவைகளுக்கு இன்றே நாடுங்கள்

**இ.ச. பேரம்பலம் சக நிறுவனம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கூட்டுறவுத் தீபம்" மலர்
சிறந்த கூட்டுறவு மலராகப் பிரகாசிக்க வாழ்த்துகின்றோம்

யாழ்.நகரில் தலைசிறந்து விளங்கும் ஒரு ஸ்தாபனம்
மக்கள் சேவை மகேசன் சேவை
அது ஓர் மகோன்னத சேவை

S.V.MURUGESU

154, Hospital Road, Jaffna.

கூட்டுறவு மலர் சிறப்புற மலர வாழ்த்துகிறோம்
சகலவிதமான பொருள்களையும்
கொழும்பில் இருந்து வரவழைத்து பெற்றுக்கொள்ளலாம்

☆ பலசரக்குப் பொருள்கள் ☆ அரிசி வகைகள்
☆ தும்புத் தயாரிப்புகள் ☆ நைலோன் கயிறுகள்

இன்னும் பலவகையான பொருள்களுக்கும் நாடுங்கள்

யாழ்ப்பாண வணிக நிலையம்

302 (108), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களும் பெற்றுக்கொள்ளலாம்.

கிருஷ்ணா தொலைபேசிச் சேவை
87, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Telephone - 021.2509, 021.2806, 021.2981, Fax - 021.2509

சகலவிதமான கட்டடப் பொருள்களுக்கும்
JAFFNA HARDWARES
General Merchants & Commission Agents
168, K.K.S. Road, Jaffna.

JAFFNA TRADERS
Hospital Road, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With The Best Compliments From:

# M/S ESS JEY ELECTRICALS

## House of Electricals

20, Reclamation Road,

Colombo - 11.

எங்களையும் ஆதரித்து

எங்கள் விளம்பரதாரர்களையும்

ஆதரியுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கூட்டுறவே நாட்டுயர்வு"

**யாழ். மாநகரில் ஓர் சிறந்த ஸ்தாபனம்**

- பிஸ்கட் வகைகள்
- பால்மா வகைகள்
- பலசரக்குப் பொருள்கள்

**மொத்தமாகவும் சில்லறையாகவும்**
**பெற்றுக்கொள்ள நாடுங்கள்**

# வி.எஸ்.பி. குறூப்

**99, 105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்**

# V.S.B. GROUP

99, 105, Power House Road, Jaffna.

கூட்டுறவு மலர் சிறக்க வாழ்த்துவோர்

# சிற்றி ஹாட்வெயா ஸ்ரோர்ஸ்

- பெயின்ற் வகைகள்
- இரும்புகள்
- கட்டிடப் பொருள்கள்

**உங்கள் தேவைக்கு இன்றே நாடுங்கள்**

# CITY HARDWARE & STORES

**General Hardware Merchants &**
**Transporters**
**55,57, Stanley Road,**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.நகரில் புகழ்பெற்ற
பல்பொருள் வாணிபம்

# AMBIHAI KALANCHIAM

304 (40), HOSPITAL ROAD,
JAFFNA.
T.P. NO. - 021-2511

உங்கள் தேவைகள் எதுவோ
அதுவே எங்கள் சேவை

**All type of**
**Official Work**
**Under**
**One Roof**

# SRI MURUGAN

**Tele Communication Service,**
**Computer Service & Agency Post Office**
**T.P. - 021-2670, 3214, 3588,**
**Fax - 021-3214**
**No.303, K.K.S. Road,**
**Jaffna.**
**E-mail - del-smskr@ eureka.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ. சங்கம்

இன்று தமது புதிய மேல்மாடி மண்டபத்தைத்

திறந்து வைப்பதுடன்,

'கூட்டுறவுத் தீபம்' மலர்

வெளியீட்டு விழாவினையும் சிறப்புற நடாத்துகின்றது

இந்த இரு நல் முயற்சியும்

சிறப்புற வாழ்த்துகின்றோம்.

*பணிப்பாளர்கள், பணியாளர்கள்,*
*தீவக மக்கள்,*
*வேலணைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.*

**வேலணை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பதிப்பகம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021-3081.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org